# வித்தகம்



கலாபூசணம்

## வில்லுப்பாட்டு வீரசிங்கம்

நினைவாக

# வித்தகம்

அமரர். வில்லுப்பாட்டு வீரசிங்கம்
நினைவாக.

அநாமிகா
மட்டக்களப்பு.

**பதிப்புத் தரவுகள்**

நூல் : வித்தகம் (அமரர் வில்லுப்பாட்டு வீரசிங்கம் நினைவாக)

வகை : தனி மனிதவரலாறு

வெளியீடு : அநாமிகா பதிப்பகம்

முதல்பதிப்பு : ஒக் - 2018

பக்கம் : 80

அச்சு : வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு.

தொகுப்பு : மகுடம் வி.மைக்கல் கொலின்

# முன்னுரை

இந்த மலர் எப்பவோ வரவேண்டியது இப்போது மலர்ந் திருக்கிறது. அவர் உயிரோடு இருக்கும் போதே அவர் கைகளில் தவழ விட எண்ணினேன். ஆனால் முடியவில்லை அவர் இறப்புக்கு பின் சாத்தியமாகியிருக்கிறது.

கலாபூசணம் வில்லுப்பாட்டு விரசிங்கம் அவர்கள் இறந்த போது அவரது இறப்பு பற்றி முக நூலில் பதிவிட்ட போது. உலகம் முழுவதும் இருந்து ஆயிரக் கணக்கானவர்கள் அஞ்சலி செலுத்தியிருந்தனர். அந்த அஞ்சலிகள் சிலவற்றையும் இந்த மலர் உள்ளடக்கியுள்ளது.

குறிப்பாக பேராசிரியர் மௌனகுரு அவர்கள் ஒரு மகா கலைஞனுக்கு மதிப்பளித்து தன் கட்டுரை மூலம் மிக முக்கியமான ஒரு வரலாற்றுப் பதிவை செய்துள்ளார்.

இம் மலரில் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், கல்வியாளர்கள், கவிஞர்கள் என பலரும் அவர் பற்றிய புகழ் அஞ்சலியை தந்துள்ளனர்.

ஒரு சரித்திரமாய் வாழ்ந்த மகா கலைஞனின் சாதனைகளை சொல்லி நிற்கிறது இம் மலர்.

தோழமையுடன்

**பாலசுகுமார்**

# பதிப்புரை

அநாமிகா பதிப்பகத்தின் முப்பதாவது வெளியீடாக கலா பூசணம் வில்லுப்பாட்டு வீரசிங்கம் நினைவாக 'வித்தகம்' என்ற இந்த நினைவு மலரை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

திருகோணமலை மண்ணின் குறிப்பாக மூதூர் மண்ணின் அடையாளமாக வாழ்ந்தவர் கலாபூசணம் வில்லுப்பாட்டு வீரசிங்கம் அவர்கள்.

கொட்டியாபுரத்தின் புகழ் எட்டுத்திக்கும் பரவ வழிசமைத்த வீரசிங்கம் ஐயா அவர்கள் எனது கணவரின் 'ஆசப்பு' என்பதில் எனக்குப் பெருமையே.

வாழும் போதே அவருக்கான மலர் ஒன்றினை தயாரித்து வழங்க எண்ணியிருந்தோம். ஆனால் அது கைகூடவில்லை. இன்று அவருக்கான நினைவு மலர் எம்மால் வெளியிடப்படுவது காலத்தின் பெருந்துயரே.

பல்துறை கலைஞராக வாழ்ந்த வில்லுப் பாட்டு வீரசிங்கம் அவர்களின் புகழில் ஒரு துளியேனும் இந்நூலில் வெளிப்பட்டால் அதுவே எமது வெற்றி.

அன்னாருக்கு எமது அஞ்சலிகள்.

**பிரமிளா சுகுமார்**

# கிராமம் எங்கும் வீசிய அக்கினிச் சுவாலை

குடத்துள் விளக்கு, குன்றின் மேலிட்ட தீபம் என இரு சொற்றொடர் தமிழில் உண்டு. குடத்துள் விளக்கு என்பதன் அர்த்தம் குடத்துக்குள் மற்றவர்க்குத் தெரியாமல் ஒளிர்ந்து கொண்டிருக்கும் விளக்கு என்பதாகும். குன்றின்மேலிட்ட தீபம் என்பது மலைக்குமேலிருந்து அனைவரும் காண ஒளி வீசும் விளக்காகும். ஒன்றை விளக்கு என்பர் மற்றதைத் தீபம் என்பர், இந்தச் சொற் பிரயோகத்தைக்கவனிக்க வேண்டும் விளக்கு எனும் சொல் தீபம் என்பதைவிடக் குணாம்சத்தில் சற்றுக் குறைவுடைய தாயினும் இரண்டிலும் காணப்படுவது நெருப்பு, அது சார்ந்த ஒளி எனும் பொதுப்பண்பே குடத்துள் விளக்காக இருந்து மறைந்து விடும் கலைஞர்களுமுண்டு.

குன்றின் மேல் தீபம் என ஒளிர் விடும் கலைஞர்களுமுண்டு கொட்டியாரப்பற்றில் உதித்து அங்கு புகழோடு வாழ்ந்த வீரசிங்கத்தை நாம் இதற்குள் எதற்குள் அடக்கலாம்? விளக்கா? தீபமா? அவரது வாலாயமான துறை அவரைப் பிரபல்யப்படுத்திய துறை வில்லுப்பாட்டுத் தான், அவரது சிறப்பான வில்லுபாட்டிற்கு அவரது இனிமையான குரல் திறனும், நடிப்புத் திறனும் பாட்டுக்கட்டும் திறனும் உறுதுணையாக இருந்துள்ளன நான் அவரது வில்லுப்பாட்டினைக் கேட்டதில்லை. ஆனால் பால சுகுமார் அவர் திறனை என்னிடம் வெகுவாகச் சிலாகிப்பார் அவரது வில்லுப்பாட்டில் மக்கள் கிறங்கிப்போய் இருப்பர்களாம் பால சுகுமாரின் மகள் அனாமிகாவின் நினைவு நாள் ஒன்றில் வீரசிங்கம் தானே ஒரு பாட்டுக்கட்டி அதற்குத் தானே இசையமைத்து உடனே பாடினார் “அவர் திறனை நேரடியாகத் தரிசித்த கணங்கள் அவை சிறப்பான சொற்கள், கணீர் என்ற குரல் வளம் பாவம், அசைவு கமகம் நிறைந்த இசை உள்ளத்து உணர்ச்சிகளை அப்படியே காட்டும் அவரது முகபாவம் அனைத்தும் அப்பாடலைப் பாடும்போது தெரிந்தன அவர் குரல் நடித்தது அவர் வில்லுப்பாட்டு எத்தனை சிறப்பாக இருந்திருக்கும் என்பதை பதச் சோறாகக் காட்டிய நிகழ்ச்சி அது அவர் ஊரில் ஒரு வைத்தியர் அத்தோடு ஒரு மந்திரவாதி, ஊர்க்கோவில் பூசாரியார்.

தெய்வங்களுக்குரிய கிராமிய மெட்டில் அமைந்த அம்மானை, கும்மி பாடல்களை அழகாகப்பாடும் ஓர் இசைக் கலைஞர் இத்தனைக்கும் மேலால். ஒரு மேடை நாடக நடிகர் பூசாரியார் குரல் வளமும், நடிப்புத் திறனும் கொண்டவராக இருந்து விட்டால் பூசாரித்தனம் மேலும் சுடர் வீட்டு பிரகாசிக்கும்.

மந்திர உச்சாடனங்களைத் தெளிவாகச் சொல்லி உருவேற்றும் பூசாரிகள் மீது தெய்வம் ஏறி உருக்கொண்டு ஆடுவோருகுப் பெரு விருப்பு ஏற்படும் மக்களிடையே அவருக்கு மிகுந்த மரியாதையும் இருக்கும் தெய்வம் ஏறி ஆடுவோரிடமும் மக்களிடமும் பெரு மதிப்பும் மரியாதையும் பெற அவரிடம் காணப்பட்ட இத்திறன்களே காரணமாகும்

வீரசிங்கத்தாருக்கு பூசாரித்தனமும் குரலும் குடும்பமுதுசம். அவரது தந்தையாரும் ஓர் பூசாரியே அண்ணனாரும் ஓர் பூசாரியே. தன் இளம் வயதிலிருந்தே அவர்கள் அருகிலிருந்து இக்கிரியைகளைப் பார்த்து வளர்ந்தவர் விஸ்வலிங்கம் என அறிகிறோம், கிராமக் கோவில்களில் மடை வைத்தல் எனபது முக்கியமான ஒருகிரியை மடை வைக்கும் முறை பல வகைப்படும்.

வெற்றிலை இகமுகம் பாளை வாழைப்பழம், வேப்பிலை பலவித பூக்கள் பொங்கல் கொண்டு அமைக்கப்படும் இம்மடைகள் மடை அமைப்போரின் திறனுக்கும் கற்பனைக்கும் ஏற்ப அலங்காரமாக அமையும். மடை கிராமக் கோவில்களின் ஓர் அடையாளம் ஒரு வகையில் இது அடுக்குச் சாத்துதலுக்கு நிகரானது. பல்வேறு பூக்களையும் இலைகளையும் சேலைகளையும் இணைத்து அம்மன் முகக்களைக்கு அல்லது தெய்வச் சிலைகளுக்கு அடுக்குச் சாத்துவர் பூசாரிமார் இது பெரும் கோவில்களில் சாத்துப்படி எனவும் வழங்கப்படும், அங்கு இதனைச் செய்பவர்கள் அங்கு பூசை புரியும் பிராமணர்களே இது அவர் அவரவர் அனுபவத்தையும் கற்பனையும் பொறுத்துள்ளது. வீரசிங்கத்தார் மடை வைத்தலில் ஒரு தேர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்தார் என அறிகிறோம் அவர் வைக்கும் மடைகள் தெய்வம் ஏறி ஆடுவோரைக் குளிர வைக்கும், பக்தர்களின் கண்களை விரிய வைக்கும்.

குலவித்தை கல்லாமல் பாகம் படும் என்பார்கள்.

சிறு வயதிலிருந்தே தந்தை, அண்ணன் வைத்த மடைகளைப் பார்த்து வளர்ந்த இவர் அவர்களையும் விடச் சிறப்பான மடைகள் வைத்தார் என அறிகிறோம் அவர் வைக்கும் காத்தவராயர் மடை

வீரபாகு மடை என்பன முக்கியமும் பிரசித்தமும் வாய்ந்தவை. இவற்றை அழகாகவும் சிறப்பாகவும் செய்யக்கூடிய ஒரேஒரு பூசாரி என்ற பெயரையும் அவர் கிராமத்தில் பெற்றிருந்தார்.

வீரசிங்கத்தாரின் இரத்தம் நாடி நரம்பு சதைகள் எல்லாம் இந்த மந்திரம் கிரியைகள் மடை வைத்தல் என்பன ஊறிக்கிடந்தன, வீடுகள் தோறும் நடக்கின்ற கும்பம் வைத்தல் பத்தினி அம்மன் வேள்வி, வீரபத்திர வேள்வி மற்றும் கிராமத்தின் வீடுகள் தோறும் நடக்கின்ற கரையல் படையல் ஆகியவற்றில் ஊரவரின் பெரு நம்பிக்கைக்கும் அபிமானத்திற்கு முரியவராக இருந்தார் கிராமத்து நாடக மன்றங்களுக்குக் கிராமத்தில் ஓர் தனி மவுசு உண்டு, கிராமத்து நாடகங்களில் புகழ்பூத்த நடிகனாக வலம் வந்தார் என அறிகிறோம், இவரது பாட்டுத் திறனும் நடிப்புத் திறனும் கற்பனைத்திறனும் நல்லதோர் நடிகனாக வர இவருக்கு உதவின வில்லிசையே இவரின் அடையாள மாயிற்று வில்லிசை வீரசிங்கம் எனப்பெயர் பெற்றார். இத்திறமையினால் பட்டங்கள் பலவும் பெற்றார். வில்லுப்பாட்டில் தமிழுணர்வுக் கருத்துக்கள், சமூக முன்னேற்றக் கருத்துக்கள் சீர் திருத்தக் கருத்துக்கள் என்பனவற்றை பாடி அவற்றை மக்கள் மத்தியில் விதைத்து ஒரு சமூக நலனாட்டக் கலைஞராகப் பிரகாசித்தார் அப்பிரகாசம் அண்மையில் அடங்கி விட்டது வீரசிங்கத்தார் குடத்துள் விளக்கா?
குன்றின் மேலிட்ட தீபமா?
அக்கினிக்குஞ்சின் தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ? எனக் கேட்டான் பாரதி வீரசிங்கத்தார் கிராமத்தில் வாழ்ந்த ஒரு அக்கினிக் குஞ்சு, அதன் சுவாலை கிராமம் நகரம் எங்கு வீசியது நாம் அவரைக் கிராமம் எனும் குன்றின்மேலிட்ட தீபம் என அழைக்கலாம்.

**பேராசிரியர் சி. மௌனகுரு**

# நானும் கலாபூசணம் வீரசிங்கச் சின்னப்புவும்

எனது புத்திதெரிந்த வயதிலிருந்து மிகவும் விருப்புக்கும் நட்புக்கும், உறவுக்கும், நடிப்புக்கும் உரிய ஒருவராகவும் என்றுமே கூடித்திரியும் ஒரு கூட்டாளியாகவும் கண்ட ஒருவர் என்றால் அது வீரசிங்கச்சின்னப்புதான்.

என்னைவிட வயதில்பல கூடியவராக இருந்தாலும் தனது மகனாக, நண்பனாக, செல்கின்ற இடங்களில் அவர் பின்னால் அவர் நடந்து செல்லும் போது அவர் பின்னால் ஓடிச் செல்கின்ற பருவம் அது. குறிப்பாக என்னை வயலுக்குக் கூட்டிச் செல்வார். செல்கின்றபோது பல காட்சிகள் எனக்கு புதுமையானதாகவே இருக்கும். மாம்பழக் குருவியின் ஓசை பூக்கூட்டிக்குருவின் ஓசை. குகூப்பாளின் குறுகுறு முயலின் பாய்ச்சல், நரியின் ஊளையிடும் சத்தம், மயிலின் ஆட்டம். குயிலின் கூவுதல் இத்தனையும் இரசிப்பதோடு ஒவ்வொன்றிற்கும் அர்த்தம் கேட்டேன். கேட்கும் போது மாம்பழக்குருவி கூவுவது கொட்டப்பாக்கு என்றும் இன்றும் ஒவ்வொன்றினை கேட்டுச் சொல்வேன். பொறுமையிழக்கும் அளவுக்கு கேள்விகள் அத்தனைக்கும் பதில் சொல்லுவதோடு பேசும் போதும், வரும் போதும், நடித்தும் சைககளையும் செய்தும் காட்டிச் செல்வது சென்று வந்து தெரியாதளவிற்கு விருப்பமான பயணத்தை ஆக்கித்தந்தவர் சின்னப்புதான்.

மேலும் வளர்ந்து பெரியவராகி எனது சமவயது நண்பர்களோடு வாழ்ந்த நாட்களில் அவரும் ஒருவராக எங்களுடன் இருப்பார். எல்லோர் இதயத்திலும் இடம் பிடித்த ஒருவர். இவரை சிலவேளைகளில் "குகா" என்றும் மச்சான் என்றும் அழைத்தாலும் அதனை விருப்போடு ஏற்று ஏற்றவாறு பதில் சொல்வார்.

நாடகம், கூத்து, கரகம், கும்மி, இசை, கிராமிய நிகழ்வுகள் கவிதை. வில்லிசை என கலைத்துறையில் சிறந்ததொரு மேதையாக திகழ்ந்தவர். எங்களூர் கோயில் திருவிழாக்களில் மேடையில் அவரோடு

சேர்ந்து அவர் வழிகாட்டலில் இராவணனாக, புரட்சி வீரனாக, குடும்பஸ்தவனாக உளநலத்தினை பாடும் பிள்ளையாக, மனைவியாக, சேவகனாக இவ்வாறு ஏராள நாடகங்களை நடித்துள்ளேன். இலக்கியத் துறையில் எனக்கு ஈடுபாட்டை ஏற்படுத்திய பெருந்தகை.

கற்ற கல்விகளிலும் ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றியும் நாடகங்களை எனது நண்பர்களான பாலசுகுமாரன், நாகேஸ்வரன், நவரெத்தினம், சசிக்குமார், கிருட்ணதாஸ், தர்மராஜா, கிருஸ்ணராஜா போன்றோர்களோடு சேர்ந்து நடிப்பை எங்களுக்கு கற்றுத்தந்தார் நடிகர் திலகம்.

எங்களூரின் இவர் ஒரு கலைப் பொக்கிஷம். சாதனையாளர், எல்லோராலும் விரும்பப்படும் மனிதர், சுமர் பிறர் எனும் பேதமற்றவர், எதையும் தெரியா தொன்று சொல்லாது முயற்சிப்போம் என வெற்றி கண்டவர். சிறுவருள் சிறுவராய், இளைஞருள் இளைஞராய், பெரியவருள் பெரியவராய் இருந்து எங்களை விட்டு பிரியாது, பிரிந்த உறவினர். இவர் புகழ் உலகமறிந்தது எனும் எண்ணத்தோடு வரலாற்று மாமனிதராக என்றும் நான் நேசிப்பேன்.

"தோன்றிப் புகளோடு தோன்றுக
அஃதிலார் தோன்றலின் தோன்றாமையே நன்று"

என்பதை இவரில் கண்டேன் என்று கூறி பெருமிதம் கொள்கின்றேன்.

இவர் பெறாமகன்
**இரா இரத்தினசிங்கம்**
**சேனையூர்.**

# பெரும் அதிர்வலையை எம்மில் பதிவு செய்திருக்கும் ஒரு பல்துறைக்கலைஞரின் இழப்பு.

தனக்காக தன்னையே உருவகித்துக்கொள்ள வைக்கும் சிறப்பு ஒரு சிலருக்கேயுண்டு. அந்த சிலரது இல்லாமையை மரணத்தின் கைகள் காலத்தின் மீது மிகக்கடுமையாக எழுதி விட்டுச் செல்கிறது. ஒரு கலைஞனின் மரணம் என்பது பிரத்யேக குணநலன்கள் கொண்டது. அது மற்றவர்களையும் தழுவிக் கொள்ளும். அவர்களின் கண்ணீரின் மூலம் அது கட்டற்ற அஞ்சலியை வெளிப்படுத்தும், அந்த ஈரத்தில் தவித்துக்கிடக்கும் தன் ஆன்மாவை ஆற்றுப்படுத்த முயலும்.

மரணத்தை எதிர் கொள்வது கடினமானது. அதைவிட கடினமானது ஒரு மகா கலைஞன் மரணத்தை எழுதுவது. ஆனால் மரணம் அவனது இருப்பை இன்னும் உறுதி செய்து விடுகிறது. மரணத்தை கடந்து செல்லும் வாழ்வு அந்த கணத்திலிருந்து ஆரம்பிக்கின்றது. ஒரு சிறந்த பண்பாளரின் மரணத்தை எழுதும் போது காலத்தை கடந்து ரத்தமும் சதையுமான வாழ்வை உணரச் செய்யும் பதிவுகளாக அது ஆகிவிடுகிறது. சிலரது இழப்பின் வெற்றிடம் அவர்களன்றி வேறொருவரால் நிரப்ப முடியாமல் அவர்கள் விட்டுச்சென்ற இடத்தில் அப்படியே உறைந்து போய்க்கிடக்கிறது. வில்லுப் பாட்டுக்கலைஞர் என எல்லோராலும் அறியப்பட்ட பல்துறைக் கலைஞர் அமரர் வீரசிங்கம் அவர்கள் காலத்தின் கைகளால் மறைக்க முடியாத ஒரு காலக்கொடை.

ஒரு பெரும் அதிர்வலையாய் எம்மில் பதிவு செய்திருக்கும் இக்கலைஞரின் இழப்பு வாழ்வில் இறக்காமல் மரணத்திலும் வாழும் தன்மை பெருங்கலைஞனுக்கே சாஸ்வதமாகிறது என்பதை எம்மில் எழுதிவிட்டுச்சென்றிருக்கிறது. காலம் சிலர் வாழ்வை ஒற்றைப்பூவென உதிர்த்தி விட்டுச்செல்லும். ஆனால் இவர் வந்த வழித்தடங்களை எந்தக்கையும் அழித்துவிடமுடியாது. ஆந்தப்பூக்கள் அவர் சமூகத்தின் முக்கிய திருப்பங்களில் வாசனை பரப்பிக்கொண்டேயிருக்கும். அவர் பரப்பிய கலையடையாளங்களின் நறுமணத்தில் அவர் என்றும் மிதந்து

கொண்டேயிருப்பார். அவருடைய ஆயுளுக்குள் ஆகாயமளவு கலைஞனாக வாழ்ந்து நாம் தொடர்வதற்கான காற்புள்ளிகளையும் இட்டுச் சென்றிருக்கிறார். ஆக அவரது அனைத்து லயங்களோடும் நமக்கான கலை வாழ்க்கை குறித்தும் அவரது வாழ்விலிருந்து நாம் குறிப்பெடுத்துக்கொள்ள முடியும்.

ஒரு உண்மைக்கலைஞன் உடனே உருவாகிவிடுவதில்லை. ஒரு சுபயோக சுப தினத்தில் காலை விழித்தெழுந்தவுடன் கலைஞன் கண் முன்னே அவதாரம் எடுப்பதுமில்லை. எல்லாவிதமான நுண்ணர்வு களுக்கும் தன்னை ஆழப்படுத்திக்கொள்ளும் தன்மை, எப்போதுமே தன்னை உன்மத்த நிலையில் தக்கவைத்துக்கொள்ளும் சித்து நிலை, சுயநினைவிலிருந்து பிரக்ஞையுடன் விலகியிருக்கும் முரண்நிலை, குடும்பம், குழந்தை, சொந்தங்கள் என எல்லாவற்றிடமிருந்தும் சற்று மறைந்திருக்கும் மனோநிலை என உயிரைச் சிறிதுசிறிதாக தங்களைத் தாங்களே உருக்கியபடியே படைப்புகளை ஜனிக்கச் செய்து ஒரு பெருங்கலைஞன் உருவாகிறான். அவன் இயல்புதான் படைப்பாகின்றது. அவன் உருவாக்கும் ஒவ்வொரு படைப்புக்குப் பின்னாலும், அவன் இந்த வாழ்வில் பிணைந்தது இருக்கிறது, விலகியது இருக்கிறது, வெறுத்தது இருக்கிறது, தழுவியது இருக்கிறது. ஒரு கலைஞன் தன் சமூகத்தின், மண்ணின் பெருமையினை, மேந்தலையினை நோக்காகக் கொண்டு செயற்படும் போது அச்சமூகம் அக்கலைஞரின் கைகளை வலுவாகப்பற்றிக்கொள்ளும். அந்த சமூகத்தின் சடங்கா சாரங்களை விரும்பிய ஒரு கலைஞனின் மூச்சுக்காற்றும் அச்சமூகத்துக்கு அது சார்ந்த செய்தி சொல்ல தார்மீகப்பொறுப்பை ஏற்றிருக்கும். இந்தப் பின்னணி வீரசிங்கம் ஐயாவுக்கு அவ்வாறே பொருந்திவிடுவதை அவர் தான் வரித்துக்கொண்ட வாழ்வியலில் இருந்து உணர முடிகிறது.

ஒரு புள்ளியிலிருந்து அவரை எழுதத் தொடங்கும் எழுத்துக்கள் பல புள்ளிகளாய் விரிகின்றன. பேனாவுக்கும் சன்னதம் வந்து விடுகிறது. எனக்கு அவரை நினைக்கும் போது தாவிச்செல்லும் படிமங்களே காட்சிகளாகின்றன. அவர் நாதஸ்வரம் வாசிக்க நான் தவில்வாசித்த தருணங்கள், அனாமிகாவின் அஞ்சலிக்கூட்டத்தில் அவர் அடியெடுத்துப் பாடிய பாடல், கும்பவிழாவில் தலைமைப் பூசாரியாக நின்று மடை

வைத்து தெய்வங்களை வழிநடத்திய காட்சிகள், அவரைக்கண்டு அன்பு மேலீட்டால் வணக்கம் சொல்லும் கும்பிட்ட கைகள், அவர் எல்லோருடனும் புன்னகையால் கைகுலுக்கும் இனிய பொழுதுகள், கணீர் என்ற குரலால் வசீகரிக்கும் இறைவணக்கப்பாடல்கள் என இது நீளும். ஒரு பல்திறம் கொண்ட கலைஞனை ஒரு காட்சிப் பின்புலத்தில் நினைத்துப் பார்க்க முடியாததை நான் இக்கணம் உணர்கிறேன்.

வில்லுப்பாட்டுக் கலைஞர், சிறந்த நடிகர், நாடக எழுத்தாளர், கவிஞர், பூசாரி, மந்திரக்கலைஞர், வைத்தியர், ஓடாவி, சிற்பி, மேசன், பாடகர், ஒப்பனைக்கலைஞர், நாதஸ்வர வித்துவான், இசையமைப்பாளர் என ஒரு மனிதனுக்குள் எத்தனை ஆளுமைகள் ஆனால் அந்த பெருங் கலைஞனின் இத்தனை ஆற்றல் வெளியையும் தெரிந்து கொண்டு அவரை நேரில் சந்திப்பவர்கள் அவரின் திகைக்க வைக்கக்கூடிய எளிமையால் திக்குமுக்காடிப்போவர். அவர் சூழலில் நம்மைக் கரைத்துக் கொண்டு அவரது ஆற்றல் குறித்து பேசும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதால் அது நமக்குள்ளும் ஒரு கனவினை, ஒரு இலட்சியத்தினை திரித்தூண்டி விடுகிறது. அவரின் இறப்பின் அசைவின்மை ஒரு கடலின் அலையிழந்த நிலையை நமக்கு நினைவூட்டினாலும் நம்முள்ளே ஆயிரம் ஆயிரம் அலைகளை அது எழுப்பிச் சென்றிருக்கிறது.
இவர் மரணத்தைக்கண்டு அஞ்சவில்லை.

“கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேம்கால் துயராண் டுழவார்
வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்கால் பரிவ திலர்”

என்பதாக அவர் மலையளவு வாழ்ந்து நிலையான சேகரிப்பை சேகரித் திருக்கிறார். ஆனாலும் அவரது வாழ்வின் தீராத பக்கங்களில் இன்னும் மிச்சமிக்கின்ற அவரது செயற்பாடுகளின் தொடர்ச்சியை எம்மைத் தொடரும்படி சொல்லாமல் சொல்லிச்சென்றிருக்கிறார்.

**க. மோகனதாசன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
சுவாமி விபுலானந்தா இசை நடனக்கல்லூரி.
கிழக்குப்பல்கலைக்கழகம்.

# பண்மைத்துவ ஆளுமை கலா பூசணம் வில்லுப் பாட்டு வீரசிங்கம்

**1939** ஆம் ஆண்டு சேனையூரில் பிறந்து தன் பன்மைத்துவ ஆளுமையால் தமிழ் கலையுலகில் தடம் பதித்த கலா வித்தகர் அபூர்வ கலைஞர் கலா பூசணம் வில்லுப் பாட்டு வீரசிங்கம் அவர்கள் கடந்த 25.07.2018 புதன் கிழமை காலமான செய்தி ஈழத் தமிழ் கலை உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு.

பல்துறை வித்தகர் என்பதற்கு அவர் கலை வாழ்வு நம் முன் சாட்சியாய் நிலைத்து நிற்கிறது. கவிஞர், பாடகர், நடிகர், நாடக எழுத்தாளர், நெறியாளர், பாடகர், வில்லுப் பாட்டு கலைஞர், ஓவியர், சிற்பாசாரி, நாதஸ்வர வித்துவான், கிராமிய ஆடல் வல்லான் என நீண்டு செல்லும் பட்டியல். அத்தனை கலைகளிலும் அறிவும் தேர்ச்சியும் உடைய அவர் கலைகளை தாண்டி பூசாரி, வைத்தியர் என ஒரு மரபு சார் அறிஞராகவும் சிறந்து விளங்கினார்.

இளம் வயதிலேயே தன் தகப்பனார் விஜயசிங்கம் காளியப்பு விடம் பரம்பரை வைத்தியம், வாகடம், மந்திரம் ஆகியவற்றை கற்ற அவர் அவற்றில் தன் தனித்துவ ஆற்றல்களை வெளிப்படுத் தியிருந்தார். குறிப்பாக திருகோணமலை மாவட்டத்துக்கு தனித்துவமான கும்ப விழாவில் சேனையூரில் தன் மந்திரப் பிரயோகத்தில் எல்லோரையும் கவர்ந்து தமிழ் மந்திரப் பயன் பாட்டில் புதிய ஒரு பண்பாட்டை உருவாக்கியவர்.

கவிதை அரங்குகளில் அவர் கவித்துவம் இயற்கையாகவே கவி பாடும் அவரது தமிழ் புலமையை வெளிப்படுத்தி நின்றது. அவரது மூதாதையர்கள் புலவர் பரம்பரையினரே அந்த மரபின் தொடர்ச்சியாக அவரது கவிதைகள் சமூக அக்கறையையும் பல் வகை பாடு பொருட்களையும் பேசி நமக்கு பல சேதிகளை சொல்லி நின்றன.

பாடகராக மட்டுமல்ல பாடல்களை எழுதி இசை அமைக்கும் ஆற்றல் அவருக்கு வரமாய் வாய்க்கப் பட்ட ஒன்று. தமிழ் உணர்வு மிக்க பாடல்களை சத்தியாக்கிரக போராட்ட கால கட்டங்களிலும் பின்னர் புதிய விடுதலை எழுச்சிப் பாடல்களையும் பாடி தமிழ் உணர்வை மக்கள் மத்தியில் கொண்டு சென்ற பெருமைக்குரியவர்.

திருகோணமலையின் ஆலயங்கள் தோறும் பக்திப் பாடல்களால் மக்களை மகிழ்வித்தவர். கணீரென்ற அவரது குரல் கேட்போரை மயக்கும் வல்லமை வாய்ந்தது.

எல்லோரும் வில்லுப்பாட்டு வீரசிங்கம் என கொண்டாடும் அளவுக்கு வில்லுப்பாட்டுக் கலையில் சாதனை படைத்தவர்.இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகிய இவரது வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகள் வானொலி ரசிகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றன. பல கிராமிய சஞ்சிகை நிகழ்ச்சிகளில் தன் குரல் வளத்தால் அந்த நிகழ்ச்சிக்கு தனி மதிப்பை உருவாக்கியவர் என்று கூறலாம்.

சிறுவர்களுக்கான கதை கூறும் கலைஞராகவும் இருந்தார். பல் குரலில் பேசி குழந்தைகளை மகிழ்ச்சிப் படுத்தும் குழந்தைகளோடு குழந்தையாய் பழகும் குழந்தை மனம் கொண்ட குழந்தை கலைஞனாகவும் வாழ்ந்தவர்.

சேனையூரில் நாடகக் கலைக்கு புத்துயிரூட்டி தன் நடிப்பால் கொட்டியாரம் எங்கும் புகழ் மிக்க நாடகங்களை மேடையிட்டு ஈழத் தமிழ் நாடக வரலாற்றில் இடம் பிடித்த நாடக கலைஞர் நடிப்பு நாடக எழுத்து நெறியாள்கை ஒப்பனை என நாடகக் கலையின் எல்லா நுணுக்கங்களையும் அறிந்த நாடகன் அவர்.

தன் தகப்பனாரிடம் மரபு வழியான அறிவைப் பெற்றிருந்தாலும் அவர் தன் முயற்சியால் எல்லாவற்றையும் கண்டு பிடித்து தானாகவே உருவாகிய ஒரு கலைஞர் என்று சொல்லுமளவிற்கு அசாத்திய திறன் மிக்கவர். கண் பார்த்தால் கை செய்யும் என்று தன் திறன்களுக்கு ஒரு வரைவிலக்கணத்தை சொல்வார்.

தேடல் மிக்க ஒரு கலைஞர் அவர் மற்றவர்களிடம் தனக்கு தெரியாததை தேடிப் போய் கற்கும் பண்பு அவரிடமிருந்தது. ஒரு முறை சேனையூர் மத்திய கல்லூரியில் பேராசிரியர் மௌனகுரு அவர்கள் நடத்திய நாடகப் பட்டறையில் கலந்து கொண்டு ஒரு எளிய கலைஞனாய் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டதை நான் இப்பொழுதும் நினைத்துப் பார்க்கிறேன். அடக்கமும் பண்பும் நிறைந்த கலைஞன் அதே நேரத்தில் அறச் சீற்றம் கொண்ட கலைஞனாகவும் எதற்கும் தலை வணங்காத தன்னடக்கம் மிக்க சுய மரியாதை உள்ள கலைஞனாகவும் வாழ்ந்து மடிந்திருக்கிறார் அவர் பல கலைஞர்களுக்கு வழிகாட்டி. என்னை முதன் முதல் நாடக மேடைக்கு அறிமுகப் படுத்தியவர் அவரே.

கிராமியக் கலைகளுக்கு அவர் ஆற்றிய மகத்தான சேவைக்காக இலங்கை அரசாங்கம் கலா பூசணம் விருது வழங்கி மதிப்பளித்தமையும் வடக்கு கிழக்கு மாகாண கலை விருது பல கலைக் கழகங்களின் விருதுகள் என பல விருதுகள் பெற்று விருதுகள் அவரால் பெருமை பெற்றன.

நம் மத்தியில் வாழ்ந்த மகா கலைஞன் அவர் அவர் விட்டுச் சென்ற பணிகளையும் அவர் கனவுகளையும் அவர் வழியில் சென்று அவர் வாரிசுகளாக கொண்டாடுவோம்.

அவர் காலத்தில் நாமும் வாழ்ந்தோம் அவர் கைப் பிடித்து நடந்தோம் என்ற மகிழ்வோடு அந்த மா கலைஞனை என்றும் நினைவு கூர்வோம்.

**பாலசுகுமார்**
சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார புலம், கிழக்குப் பல்கலைக் கழகம்.

---

# மங்காத தீபம்

சேனையூரில் விளைந்த முத்து
வீரசிங்கம் என்னும் சொத்து
பறந்தது வயது பத்து
வந்தது அவன் உடம்பில் கெத்து
கூத்தாய் பாட்டாய் மந்திரமாய்
கலையாய் வித்தையாய் வாழ்ந்தவன்

பழகியகாலம் கொஞ்சம் ஆனால்
வைத்தபாசம் அதிகம்
சித்திரை வருடப்பிறப்பில் - இனி
யாருக்கு கைவிஷேசம் கொடுப்பேன்

காயப்பா உங்களோடு பலகாலம்
பழகியிருக்கலாம் என தோன்றுகிறது
என்றும் உம் நினைவில்

பேறாமகன்
**– செல்வஜிந்தன் –**

## அமரர்
# வில்லுப்பாட்டு வீரசிங்கம் ஐயா அவர்கள்
## ஒரு சகாப்பதம்

அமரர் காளியப்பு வீரசிங்கம் எனது அப்பாவழி உறவினர். அப்பாவின் தாயின் தம்பி.

1981ஆம் ஆண்டு நான் தம்பலகமத்திலிருந்து சேனையூர் மகாவித்தியாலயத்தில் சேர்ந்த முதல் நாள் பாடசாலையில் வந்து கட்டிப்பிடித்து "நல்லாப் படிக்கோணும் பேரா" என்று கூறிய மனிதர். அவருக்கும் சேனையூர் மகாவித்தியாலயத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. தமிழ்த் தினப் போட்டிகளில் அவரது வழிகாட்டல் இல்லாது சென்ற நாடகங்கள், வில்லுப்பாட்டுகள், நாட்டார்பாடல்கள் கிடையாது எனலாம்.

சேனையூர் மகாவித்தியாலயத்தின் வெள்ளிவிழாவின் போது அவரது நிகழச்சிகள் அனைவரதும் பாராட்டுக்களைப் பெற்றன. அப்போதைய முதல்வர் அமரர் கதிர்காமத்தம்பி ஐயா காலத்திலும் சரி, அதன்பின் முதல்வராகவிருந்த தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு.க.துரைரெட்டினசிங்கம் ஐயாவின் காலத்திலும் சரி அதற்குப் பின்னான காலத்திலும் சரி சேனையூர் மகா வித்தியாலயத்தின் கலை நிகழ்வுகளுடன் பின்னிப் பிணைந்தவர்.

வில்லுப்பாட்டு செய்வதில் அவருக்கு நிகர் அவரே. இனியொருவர் அவ்வாறு நிகழ்த்துவது என்பது ஐயமே. சேனையூர் மகாவித்தியாலய மாணவர்கள் பங்குபற்றிய விஞ்ஞானப் போட்டி யொன்றில் அவரது வில்லுப்பாட்டு முதலாமிடம் பெற்றது. "கன்னியாவின் வெந்நீர் ஊற்றை அறிவியல் ரீதியாக அணுகி அவ்வில்லுப்பாட்டை படைத்திருந்தார்"

சிறந்த ஒரு நாட்டார் பாடலாளர். நாட்டார் பாடல்களை எழுது வதும் பாடுவதும் அவரது சிறப்பு. குறித்த இடத்தில் இருந்து கொண்டே எழுதாமலே இயல்பாகவே பாடல்கள் அவர் நாவில் தவழும். தமிழ் கூத்தாடும்.

சேனையூர் மகா வித்தியாலயத்திலே நடைபெற்ற விவசாய நிகழ்வொன்றிலே "வெங்காயக் குழம்பு வையடி அதுக்கு வெந்தயத்தப் போட்டு வையடி" என்ற பாடல் அனைவராலும் மிகவும் பாராட்டப்பட்டது.

விடுதலைப்புலிகளின் ஆளுகைக்குள் மூதூர் பிரதேசம் இருந்த காலத்தில் கலை பண்பாட்டுக் கழகத்தின் நடவடிக்கைகளை முன்னின்று நடத்தியவர். பல கலைநிகழ்வுகளை தலைமையேற்று நடத்தி அனைவரினது பாராட்டுக்களையும் பெற்றதோடு பல விடுதலைப் புரட்சிப் பாடல்களையும் இயற்றிப் பாடிய மகான்.

இனிமையாகப் பேசும் ஐயா அனைவரிடமும் அன்பானவர். எவரிடமும் கோபித்துக்கொள்ளாத பண்பாளன். எங்கள் குடும்பங்களின் வீடுகளில் நடைபெறுகின்ற வீரவாகு மடையின் முதன்மைப் பூசாரியாக இருந்து நடத்துபவர். இரவுமுழுவதும் விழித்திருந்து மடைப் பூசைகளை நடாத்துவார்.

திருக்கோணமலை மாவட்டத்தில் கலாபூசணம் விருது அரசினால் முதன்முதலாக ஐயாவிற்கு வழங்கப்பட்டது.

அவருக்கு கிடைத்த விருதினை அப்பிரதேச மக்கள் மகிழ்ச்சியுடன் நோக்கினர். பாராட்டுத் தெரிவிக்கும் நோக்கில் கட்டைப்பறிச்சான் கற்பக விநாயகர் முன்றலில் பாராட்டு விழா நடைபெற்றது. அவ்விழாவில் ஐயாவின் நெறியாள்கையில் "வசந்தன் கூத்து" மேடையேற்றப்பட்டது. அக்கூத்தில் நானும் ஒரு கலைஞனாக நடித்தது எனக்குப் பெருமையாக உள்ளது.

அவரது ஆலோசனை வழிகாட்டலில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வசந்தன் கூத்து என்னால் மேடையேற்றப்பட்டது. பலரது பாராட்டையும் பெற்றது.

ஐயாவின் செவ்வி ஒன்று பேராதனைப் பல்கலைக்கழக சங்கீத நாட்டிய சங்கத்தினால் வெளிடப்பட்ட "கீதம்" என்ற சஞ்சிகையில் வெளிவந்தது. அப்பேட்டியில் தனது கலைப் பணிகளை ஐயா விரிவாக எடுத்தியம்பியிருந்தார்.

சேனையூர், கட்டைப்பறிச்சான், கடற்கரைச்சேனை, சம்பூர் போன்ற ஊர்களில் உள்ள அனேகமான கலைஞர்கள் ஐயாவின் வழிநடத்தலில் அல்லது வழிகாட்டலில் நெறிப்படுத்தப்பட்டவர்கள் என்றால் அது மிகையில்லை.

அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பு. எனினும் அவர் காட்டிய வழியில் அவரை நினைவிருத்தி கலையினை வளர்ப்பதே அவருக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

**க. திருச்செல்வம்**

# பல்துறைக் கலைஞர் கலா பூசணம் வில்லுப் பாட்டு வீரசிங்கம்

கொட்டியாரம் தந்த கலைத் தாயின் தலைமகன் வில்லுப்பாட்டு வீரசிங்கம் அவர்கள். ஈழத் தமிழர் தொல் நிலமான சேனையூரில் 1939ஆம் ஆண்டு விஜயசிங்கம் காளியப்பு தங்கம் தம்பதிகளின் இளைய மகனாக பிறந்தார்.

விஜயசிங்கம் காளியப்பு அவர்கள் திருகோணமலை மாவட்டத்தில் புகழ் பெற்ற சித்த வைத்தியர். கண் வைத்தியத்தில் நவீன மருத்து வத்துக்கு இணையான மருத்துவ முறைகளை கையாண்ட தமிழ் மரபு முறை சார்ந்த ஆயுள்வேதம் அறிந்தவர் பூசகர். பரம்பரை கல்வி முறையில் தன் தந்தையிடமும் அண்ணர் விஜய சிங்கத்திடமும் வைத்தியம் மந்திரம் ஆகியவற்றை முறைப்படி பயின்று இறக்கும் காலம் வரையில் அந்தப் பணிகளை சிறப்பாக செய்தவர்.

எல்லாவற்றையும் கேள்வி கேட்டு ஆய்வு பூர்வமாக அணுக்கும் திறன் இளமையிலேயே அவருக்கு இருந்ததால் புதிய புதிய விடயங்களை ஆர்வத்துடன் தானாகவே கற்றுக் கொண்டார். இதனால் அவர் காலத்து இளைஞர்களிடமிருந்து மாறு பட்ட சிந்தனையுடைய வராகவும் எல்லாவற்றிலும் புதிய மாற்றங்களை விரைவில் ஏற்றுக் கொள்பவராகவும் இருந்தமை அவருக்கு சில சந்தர்ப்பங்களில் சங்கடங் களை ஏற்படுத்தியதும் உண்டு. ஆனாலும் தான் கொண்ட கொள்கையில் தடம் மாறா தகைசார் ஆளுமையாய் வாழ்வை எதிர் கொண்டவர்.

வைத்தியம் பூசாரித்துவம் ஆகியவை அவரது பரம்பரை தொழிலாக இருந்த போதும் அவர் பாட்டன் தம்பலகாமத்தில் பெரும் புலவராக அறியப் பட்டவர் அந்த நாட்களில் ஈழத்துக்கு வந்து வாது கவி சொல்லி செருக்குற்ற இந்திய புலவர்களை தன் கவிகளால் செருக்கடக்கியது மட்டுமல்லாமல் அறம் பாடும் வல்லமை பெற்றவர்கள் அந்த புலமை மரபின் வாரிசாக வில்லுப் பாட்டு வீரசிங்கம் அவர்களும் கவி பாடும் புலமை பெற்றவர் நினைத்தவுடன் இருந்த மாத்திரத்திலேயே கவி சொல்லி சூழ இருப்பவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விடுவார். கவியரங்குகளில் அனல் பறக்கும் கவிதைகளால் தமிழுக்கு பெருமை சேர்த்தவர். இதுவரை அவர் எழுதிய கவிதைகள் ஆயிரத்துக்கு மேல்

படும் ஆனாலும் எதுவும் தொகுப்பாகவில்லை. நவீன கவிதை மரபுக் கவிதைஇரண்டும் கைவரப் பெற்றவர். இவற்றை தாண்டி காவியம் அகவல் கும்மி என கிழக்கு மாகாணத்துக்கு சொந்தமான பாடல் மரபிலும் பாண்டித்தியம் மிக்கவர்.

மிகச் சிறந்த பாடகர் கணீரென்ற வெங்கலக் குரல் கேட்போரை கட்டிப் போடும் காந்த மிகு வசீகரம் அவரது குரலுக்கு இருந்தது. திருகோணமலையின் கிராமங்கள் தோறும் அவர் குரல் ஒலித்தது கோயில் திருவிழாக்கள் தமிழ் விழாக்கள் எங்கும் தன் இசை மழையால் எண்ணற்ற ரசிகர்களின் இதயத்தில் இடம் பிடித்தவர். அந்த நாட்களில் யாழ்ப்பாணத்திலிருந்து சின்ன மேள காரர் கோயில் திருவிழாக்களுக்கு அழைத்து வரப் படுவது ஒரு வழக்காக இருந்தது அந்த முறை மாறி இவர் பாட்டை ரசிக்க கோயில் திருவிழாக்களில் ஆயிரக் கணக்கில் மக்கள் கூடினர்.

வில்லுப் பாட்டு எனும் கலை மக்கள் மயப் பட்டதும் ஜனரஞ்சகத் தன்மையடைந்ததும் இவரது பாட்டுத் திறத்தால் என்றால் மிகையில்லை சமூக அவலங்களை தன் வில்லுப் பாட்டுகள் மூலம் வெளிக் கொணர்ந்த அதேவேளை புராண இதிகாச இலக்கிய கதைகளிலும் வில்லுப் பாட்டுகளை உருவாக்கி மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றதோடு அன்றைய நாட்களில் மக்கள் வாழ்வை கருப் பொருளாய் கொண்டு இலங்கை வானொலியில் பல வில்லுப் பாட்டுகளை நிகழ்த்தி அகில இலங்கையிலும் அறியப் பட்டவராய் ஆனதோடு அதனாலேயே 'வில்லுப் பாட்டு வீரசிங்கம்' எனும் பெயரும் நிலைத்துப் போனது.

நடிப்பில் மேடையில் பல பரிமாணங்களை காட்டக் கூடிய மகா நடிகன் தன் விழிகளாலேயே மாய ஜாலம் செய்யும் வியத்தகு நடிகன் சிவாஜிக்கு நிகரான திறன் மிக்கவர். சிவாஜி ஏற்ற பல பாத்திரங்களையும் தானும் ஏற்று பாத்திரச் சித்தரிப்பை கச்சிதமாக வெளிப்படுத்துவார். சிவனாக, கர்ணனாக, மார்க்கண்டேயராக, அரிச்சந்திரனாக மேடையில் வாழ்ந்து காட்டியவர். எல்லா வகை நடிப்பும் கை வரப் பெற்ற கலைஞன் அவர். நவரசங்களையும் பாவங்களின் மூலம் உடல் மொழியால் அழகிய அசைவுகளால் நடிப்பிற்கு இலக்கணமாய் அமைந்த மகா நடிகன்

**பாலசுகுமார்**
மேனாள் முதல்வர், கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக் கழகம்.

# முத்தமிழ் கலைஞர் வில்லுப் பாட்டு வீரசிங்கம்

சேனையூர் தந்த முத்தமிழ் கலைஞர் வில்லுப் பாட்டு வீரசிங்கம் அவர்கள் ஈழம் தந்த மா கலைஞன். முத்தமிழ் வல்லோன் பல் கலைகளும் வாய்க்கப் பெற்றோன் நம் தொன்மை மிகு தமிழ் பண்பாட்டின். மரபு வழி கலைகளை மக்கள் மத்தியில் தான் வாழும் வரை எடுத்துச் சென்றோன் இன்று நம்மோடு இல்லை. சென்றவாரம் 27.07.2018 புதன் கிழமை மண் நீத்து மரணம் அவரை அணைத்துக் கொண்டது. எண்பது வருடங்கள் வாழ்ந்து மறைந்த கலை வல்லோன்.

தான் வாழ்ந்த கொட்டியாரத்து மண்ணுக்கு தமிழ் கூறும் நல்லுலகெங்கும் அறியப் பட்ட அசாத்திய திறன்கள் வாய்க்கப் பெற்ற அற்புத கலைஞன் அவர். இப்படி ஒரு கலைஞன் இருக்க முடியுமா எனும் அளவுக்கு வியக்க வைக்கும் ஆளுமை.

பரம்பரை வழியாக கருவிலே திருவுடைய புலமை வைத்திய பூசாரித்துவ தமிழ் மரபின் வாரிசாய் தன் பாட்டன்கள் வால்சிங்கம், விஜயசிங்கம் தகப்பனார் காளியப்பு ஆகியோரின் மரபு வழிப் பட்ட ஒரு வரலாற்றின் தொடர்ச்சியே வில்லுப் பாட்டு வீரசிங்கம் அவர்களின் வாழ்வும் பணிகளும்.

அவர் கலை வாழ்வு என்பது நம் கலை மரபு சார்ந்ததாகவே கடந்த அறுபது ஆண்டுகள் தொடர்ந்திருக்கிறது. தன் தகப்பனாரிடம் வைத்தியம் மந்திரம் ஆகியவற்றை கற்றுக் கொண்ட அவர். தந்தையின் வழியில் தனையன் என்ற முறமையில் ஒரு தொடர்ச்சியை பேணிய அதே வேளையில் தானாகவே தேடி வாகட முறைகளை கற்று முறிவு வைத்தியம் பொதுவான தமிழ் வைத்திய முறைகளின் மூலம் கொட்டியாரம் தம்பலகாமம் திருகோணமலை ஆகிய இடங்களில் அறியப் பட்டவராய் இருந்தார்.

மந்திர முறமையில் வேறு எவரும் தொடாத உச்சங்களை தொட்டவர் அவர் குறிப்பாக சேனையூர் கட்டைபறிச்சான் பிரதேசத்தின் தனித்துவத்தை பிரதி பலிக்கும் கிராம வழிபாட்டு நம்பிக்கைகளில்

செயல் திறன் மிக்க ஒரு பூசாரியாக தனது தகப்பன் வழியிலும் அண்ணன் விஜயசிங்கம் (விஸ்வலிங்கம்) வழி காட்டலிலும், தமையன் பாலசிங்கம் துணையுடனும் கும்பம், பத்தினி அம்மன் வேள்வி, வீரபத்திரந் வேள்வி, மற்றும் வீடு தோறும் நடக்கும் கரையல் படையல் மடை ஆகியவற்றில் ஊரவரின் பெரு நம்பிக்கைக்குரியவராக. இருந்தமையும் தனித்துவம் மிக்க வீரபாகு மடை, காத்தவராயர் மடை ஆகியவற்றை செய்யக் கூடிய ஒரே ஒருவர் என்ற தனிப் பெருமையும் பெற்ற பூசாரித்துவம் மிக்கவர்.

தன் பாடல்களால் திருகோணமலை எங்கும் புகழ் பெற்ற இசைக் கலைஞர். கட்டைபறிச்சான் கலைவாணி இசைக் கழகம், மூதூர் ரூபி இசைக் கழகம் ஆகியவற்றில் குரல் வளத்தால் கேட்போர் மனங்களில் நீங்கா இடம் பிடித்தவர். தானே பாடல் இயற்றி இசையமைத்து பாடும் திறன் கைவரப் பெற்றவர். திருப்புகழை இவர் போல் சொற்கள் பிசகாமல் பாடும் திறன் எல்லோருக்கும் வாய்க்காது. மூச்சு விடாமல் திருப்புகழை கேட்போர் கண்கள் குழமாக உணர்ச்சி பொங்க பாடுவார்.

பன்மத்துவ கலை ஆளுமையாக இருந்தாலும் வில்லுப் பாட்டின் மூலமே அவர் அகில இலங்கைக்கும் அறிமுகமானார் வில்லிசை எனும் கலையில் தனக்கான ஒரு மோடியை உருவாக்கி அந்த கலைக்கு ஒரு புதிய மொழியை கொடுத்தவர். சமூக பிரச்சினைகளை வில்லுப் பாட்டின் வழி பேசியதோடு தமிழன் பெருமை தமிழ் உணர்வு, காவியக் கதைகள், புராண வரலாறுகள் என்பன அவர் வில்லுப் பாட்டின் கருப் பொருளாய் வலம் வந்தன. எழுபதுகளில் இவர் வில்லுப் பாட்டுகளை கிராம சஞ்சிகை நிகழ்ச்சிகளின் மூலம் இலங்கை வானொலி ஒலிபரப்பியமை இங்கு குறிப்பிடத் தக்கது. கொட்டியாரப் பிரதேசதில் இவரை பின்பற்றி வில்லிசைத்தோர் பலர்.

ஈழத்து தமிழ் நாடக வரலாறு இவர் பெயரை சொல்லாமல் கடந்து விட முடியாது. நாடகக் கலையின் எல்லா பரிமாணங்களையும் அறிந்தவர். நடிப்பு, நாடக எழுத்துரு, நெறியாள்கை என எல்லாவற்றிலும் தன் திறனை வெளிப்படுத்தியிருந்தாலும் நடிப்பில் அவர் தொட்ட உச்சங்கள் அனேகம். மனோரதிய நடிப்பு, நகைச்சுவை, யதார்த்த பாத்திரச் சித்தரிப்பு. என நடிப்பின் பன்முகத் தன்மைகளை தான்

ஏற்ற கதாபாத்திரங்களில் சித்தரித்து சிகரங்களை தொட்ட கலைஞன். அவர் நடிப்பின் மூன்று வேறு பட்ட பரிமாணங்களை பார்த்தவன் நான். ஆசிரியர் ஜெயவீரசிங்கம் அவர்கள் நெறியாள்கையில் "காட்டுப் பூக்கள் வாடுகின்றன" எனும் நாடகத்தில் யதார்த்த நடிப்பின் பல் பரிமாணங்களையும் காட்டியிருப்பார். "இவளும் ஒரு தாய்" நாடகத்தில் ஆங்கில மனோரதிய பாணி நடிகர்கள் யூல் பிரைனர் போன்றோருக்கு சவால் விடும் நடிப்பை கர்ணன் பாத்திரம் மூலம் நிகழ்த்தி நின்ற கலைஞன் அவர். திருகோணமலையில் பல மேடையேற்றங்களை கண்ட "தென்றலும் புயலும்" நாடகத்தில் வினோதன் என்ற பாத்திரத்தின் மூலம் நகைச்சுவை நடிப்பிலும் தான் சளைத்தவனல்ல என்பதை உணர வைத்தார்.

நடிப்பில் ஆடலுடன் கலந்த அரங்காற்றுகைகளுக்கும் சொந்தக் காரன் இவர் சேனையூர் இந்து இளைஞர் மன்றம் நடத்திய சிவராத்திரி விழா ஒன்றில் சிவ தாண்டவம் ஆடி எல்லோரையும் ஒரு பக்தி அனுபவத்துக்குள் அழைத்துச் சென்று அதிசயிக்க வைத்த கலைஞன். காவடி, கரகம், வசந்தன், கோலாட்டம், கும்மி ஆகியவற்றை மற்றவர் களுக்கு கற்று கொடுத்த கலை ஆசான் என்ற முகமும் கொண்டவர்.

எத்தனை கலை முகம் கொண்ட ஆளுமை வைத்தியர், பூசகர், நடிகர், புலவர், ஓவியர், சிற்பாசாரி, பாடகர், வில்லிசை மன்னர், ஆடகர், நாதஸ்வரக் கலைஞர், விவசாயம், தச்சுவேலை, கட்டிடவேலை என தொழில் சார்ந்த கலைஞராயும் வாழ்ந்து மறைந்திருக்கிறார்.

இலங்கை அரசின் கலாபூசணம் பட்டத்துக்கு பெருமை சேர்த்தவர். அந்த மகா கலைஞனின் நினைவுகளோடு பயணிப்போம்.

**பாலசுகுமார்**

சேனையூர்

மேனாள் முதன்மையர்

கலை கலாசார புலம்

கிழக்குப் பல்கலைக் கழகம்.

# வித்தக கலைஞர் வில்லுப் பாட்டு வீரசிங்கம்

ஈழ நிலத்தின் பெரும் கலைஞர் வில்லுப்பாட்டு வீரசிங்கம். கிழக்கு மாகாணம் மா கலைஞர்களை தந்து தமிழுக்கும் தமிழ் பண்பாட்டுக்கும் பெருமை சேர்த்த பெருமை கொண்டது அந்த மரபின் நீட்சியாய் 1939ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டம் சேனையூர் எனும் பழம் தமிழ் கிராமத்தில் பிறந்தவர் அமரர் வில்லுப் பாட்டு வீரசிங்கம்.

புலமைப் பாரம்பரியமும் வைத்தியம் பூசாரித்துவம் மந்திர முறமை எனும் தமிழ் மரபை பேணுகின்ற குடும்ப மரபில் விஜயசிங்கம் காளியப்பு தங்கம் தம்பதிகளின் புதல்வராய் பிறந்து தன் குடும்ப வழி வந்த மரபின் தொடர்ச்சியையும் புதிய மரபுகளின் தொடக்கமாகவும் வாழ்ந்து மறைந்த அசாத்திய ஆற்றல்கள் வாய்த்த பன்மைத்துவ ஆளுமை வில்லுப் பாட்டு வீரசிங்கம் அவர்கள்.

தன் இளமைக் காலத்தில் படிப்பில் நாட்டம் கொள்ளாத அவர் குழப்படி மிகுந்தவராக இருந்தாலும் தகப்பனார் காளியப்பு அவர்களோடு அவர் வழியே பயணிக்க அவர் போகுமிடங்கள் தோறும் அவரோடு பயணித்து தன் தகப்பனாரின் அனுபவங்களை தன் வயமாக்கியவர். அந்த நாட்களில் கண் வைத்தியத்தில் இன்றைய நவீன மருத்துவ முறைகளுக்கு சவால் விடும் அளவுக்கு அவர் வைத்திய முறமை அமைந்திருந்தமையும் குறிப்பிடத் தக்கது. தன் தகப்பனாரிடம் மந்திரம் வைத்தியம் ஆகியவற்றை மரபு வழியாக கற்றுக் கொண்ட அவர். ஆயுள் வேத தமிழ் வைத்தியத்தின் எல்லா முறைகளையும் பின்னைய நாட்களில் தன் முயற்சியின் மூலம் அறிந்து அறிவார்ந்த தளத்தில் செயல் பட்டவர்.

இயற்கையாகவே கவி பாடும் வல்லமை பெற்றவர் அவரது முப்பாட்டன் தம்பலகாமத்தில் புகழ் பெற்ற புலவர் அந்த நாட்களில் இந்திய புலவர்களுடன் வாது கவி பாடி வெற்றி கண்ட பரம்பரையின் வாரிசாக அவர் ஒரு வர கவியாக மிளிர்ந்தார். இம்மென்றால் எழு

நூறும் அம்மென்றால் ஆயிரமும் என கவி சொல்லும் ஆற்றல் அவருக்கு.கவி சொல்லுவது மாத்திரமல்ல அந்த கவிக்கு மெட்டமைத்து பாடும் திறமை வாய்க்கப் பெற்றவர்.

அவர் குரல் சௌந்தரராஜன், கோவிந்தராஜன் இருவரது குரலும் இணைந்தால் எப்படி இருக்குமோ அந்த தனித்துவத்தை பிரதி பலித்து நிற்கும். கட்டைபறிச்சான் கலைவாணி இசைக்கழகத்துடன் இணைந்து திருகோணமலை மாவட்டம் முழுவதும் அவர் குரல் ஒலிக்காத தமிழ் கிராமம் எதுவும் இல்லை எனும் அளவுக்கு பிரபல்யமானவர்.

அவர் பல்துறை ஆற்றல் வாய்ந்தவராக இருந்தாலும் அவர் இறக்கும் வரை அவரை அடையாளப் படுத்தியது வில்லுப் பாட்டு எனும் தமிழர் கலைதான் வில்லுப் பாட்டு மன்னன் மாஸ்ரர் சிவலிங்கம் அவர்களை மானசீக குருவாக வரித்துக் கொண்டு தானே ஒரு தனித்து வமான வில்லுப்பாட்டு மரபை உருவாக்கி அதன் வழி பல வாரிசுகளை உருவாக்கி அவர்கள் இன்று வரை தொடரும் வில்லுப் பாட்டு மரபு.

நாடகத்துறையில் அவர் சாதித்தது அனேகம் நாடக எழுத்து நடிப்பு, நெறியாள்கை, ஒப்பனை உடையமைப்பு எல்லா திறமைகளும் வாய்க்கப் பெற்றவர். சேனையூர் கட்டைபறிச்சான் பிரதேசம் கூத்து, விலாச நாடகம் ஆகியவற்றில் நீண்ட வரலாறு கொண்டது அந்த வரலாற்றின் வழித் தடத்தில் தன் நடிப்பால் பார்ப்போரை வியக்க வைத்த ஆளுமை அவர் ஏற்ற பாத்திரங்கள் சிவனாக, கர்ணனாக, வீரபாண்டிய கட்டபொம்மனாக, அரிச்சந்திரனாக, மார்க்கண்டேயராக, முருகனாக என வரலாற்று புராண காதாபாத்திரமாக மேடையில் வாழ்ந்து காட்டியவர் பல வேளைகளில் சிவாஜிக்கு நிகரானவராகவும் சில சந்தர்ப்பங்களில் அவரையும் மிஞ்சும் நடிகனாகவும் பார்வை யாளர்களை தனது நடிப்பால் கட்டிப் போட்டவர்.

எந்தப் பாத்திரமானாலும் எளிதில் அந்த பாத்திரத்தை அதன் சித்தரிப்பை நம் முன் கொண்டு வரும் மகா நடிகன் அவர். அவர் நடித்த நாடகங்களில் மிகச் சிறந்த நாடகம் அவளும் ஒரு தாய் ஆசிரியர் தா.ஜெயவீரசிங்கம் எழுத்து இயக்கத்தில் கர்ணனாக அசத்தியிருப்பார். இறுதிக் காட்சியில் பார்வையாளர்கள் கண்கள் குளமான காட்சியை பார்த்தவன் நான்.

சேனையூர் மத்திய கல்லூரியின் கடந்த அறுபதாண்டு கலை வரலாறு அவரோடு இணைந்த வரலாறு. நாடகப் போட்டிகள் கலை விழாக்கள், தமிழ் தினப் போட்டிகள் எல்லாவற்றிலும் அவர் கரம் இருக்கும் நடிப்பு பயிற்சி ஒப்பனை உடையமைப்பு என அனைத்திலும் அவர் உழைப்பு தெரியும் ஒரு பாடசாலை ஆசிரியரைப் போலவே அவரும் ஓடி ஆடி செயல்படுவார். அவர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர்.

காவடி கரகம், கும்மி, கோலாட்டம், வசந்தனாட்டம் ஆகிய தமிழர் பாரம்பரிய கலைகளை மாணவர்களைக் கொண்டு தயாரித்து பல கலைப் போட்டிகளில் வெற்றி பெற்று பரிசுகளை தனதாக்கி கொண்டவர். அவர் ஒரு முறை தயாரித்த காவடியாட்டம் இன்னமும் என் கண்ணை விட்டு மறையவில்லை.

இலங்கையில் வேறு எங்கும் இல்லாத கலாசார மரபு கும்பம். சேனயூரின் தனித்துவத்துக்கு சிறப்பு சேர்க்கும் பண்பட. வித்தகச் செம்மல் விஜயசிங்கம் காளியப்பு அவர்களின் கும்ப கலாசாரத்தின் தொடர்ச்சியை வேறொரு தளத்திற்கு கொண்டு வந்து சேர்த்தவர் வில்லுப் பாட்டு வீரசிங்கம் அவர்கள். சேனையூரில் திரு காளியப்பு அவர்களுக்கு பின் கும்ப மரபை பேணிய அண்ணன் விஜயசிங்கத்தோடு சேர்ந்து பணியாற்றி பின்னர் மருத நகரில் தனியான கும்ப வழிபாட்டையும் புவனேஸ்வரி அம்மன் கோயிலையும் நிறுவி காத்தவராயர் வேள்வியையும் நடாத்தி மருத நகரில் ஒரு சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.

பத்தினியம்மன் பரிகல வேள்வி, வீரபத்திரன் பரிகல வேள்வி வீரவாகுத் தேவருக்கான மடை, கரையல் அமுது வேள்வி என தொடருகின்ற கிராம மக்களது நம்பிக்கை சார் சடங்குகளின் பூசாரியாக கடமையாற்றி ஊர் மக்களின் நம்பிக்கையை பெற்றவர்.

வைத்தியத் துறையில் தன் தகப்பனாரின் மரபை பேணிய அதே வேளை முறிவு வைத்தியத்தில் அவரது சிறப்புத் தேர்ச்சியும் மந்திரத்தின் மூலம் உழுக்கு எடுக்கும் வைத்தியமும் புகழ் மிக்க ஒன்று.

ஓவியம் சிற்பம் என்பவற்றை எந்த ஆசாரியிடமும் அவர் கற்கவில்லை பல ஆலையங்களுக்கான சிற்பங்களை வடிவமைத்து கொடுத்ததோடு இன்று சேனையூர் வர்ணகுலப் பிள்ளையார் கோயிலில்

உள்ள சூரனை வடிவமைத்ததோடு முதன் முதல் கொடியாரத்தில் கட்டுத் தேர் கடி ஓட விட்ட பெருமையும் இவரையே சாரும்.

சகல கலைகளையும் செய்ய வல்லவர் நாதஸ்வரம் வாசிப்பதிலும் சுயமாகவே கற்று தனி முத்திரை பதித்தார். அரசியலில் தமிழ் உணர்வு மிக்கவர் ஈழவிடுதலை உணர்வாளர் தன் புரட்சிகர பாடல்களால் இன உணர்வூட்டியவர்.

ஒரு மனிதனால் இவ்வளவும் செய்ய முடியுமா என்ற கேள்விக்கு முடியும் என்ற பதிலாய் வாழ்ந்தவர் வில்லுப்பாட்டு வீரசிங்கம் அவர்கள். தச்சு வேலை, கட்டிடம் கட்டும் கொத்தனார், விவசாயி, சிற்பாசாரி, ஓவியர், கவிஞர், பாடகர், நடிகர், நாடக எழுத்தாளர், நெறியாளர், நடன பயிற்றுனர், ஒப்பனையாளர், சாத்துபடியாளர், வைத்தியர், பூசாரி, சமூக செயல் பாட்டாளர் எத்தனை முகங்கள் இந்த சாதனையாளனுக்கு.

பல விருதுகள் அவரை மதிப்புறுத்தின இலங்கை அரசின் கலாபூசண விருது, வடக்கு கிழக்கு மாகாண அரசின் இலக்கிய விருது, தமிழ் சங்க விருது பல சமூக கலாசார அமைப்புகளின் விருதுகள் அவரால் பெருமையடைந்தன. அந்த மா கலைஞனின் நினைவுகளுடன் நாம்

25.07.2018 புதன்கிழமை நம்மை விட்டு பிரிந்த அந்த மா கலைஞனின் நினவாக இந்த கட்டுரை அவரைப் பற்றிய அறிதலை உங்கள் முன் வைக்கிறது.

**– பாலசுகுமார் –**
சேனையூர்

மேனாள் முதன்மையளர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்.

# ஆசை ஐயா

ஐயா ஐயா எங்களைப் பாருங்கள்
ஐயா இனி நாங்கள்
பாட்டு கேட்பது யாரிடம்
கதை கேட்பது யாரிடம்
கவிதை கேட்பது யாரிடம்
வில்லிசை கேட்பது யாரிடம்
ஆக்கம் கேட்பது யாரிடம்
நாடகம் கேட்பது யாரிடம்

ஏன் ஐயா எங்களை தவிக்க விட்டு சென்றீர்
உங்கள் முகம் காண ஆசையாக இருக்கிறது
உங்கள் பாடல் கேட்க ஆசையாக இருக்கிறது
உங்கள் கம்பீர ஒலி கேட்க ஆசையாக இருக்கிறது

எல்லாம் ஆசையாக மட்டுமே உள்ளது
ஐயா எங்களிடம் வரமாட்டீர்களா...?
உங்கள் வரவுக்காய் காத்திருக்கும்.

பேரப்பிள்ளைகள்
**– சர்ஜிகா, பிர்த்திகா, பவிசன்,**
**தனுஸ்கா –**

# என் நினைவில் நீங்கா காயப்பா

இனி எங்கு உன் முகம் காண்போம்
இனியநாளை இழந்துவிட்டோம்
மண்ணிலே வேரில்லா மரம் போலும்
விண்ணிலே வாலில்லாபட்டம் போலும்
இனி எங்கு உன் முகம் காண்போம்

விடிகாலை பொழுதினிலே விசித்திரமாய் ஒருசத்தம்
விரைந்தோடி வருகையிலே குற்றுயிராய் நீர் இருந்தீர்
மனையாள் ஏங்கிநிற்க பிள்ளைகள் நாம் அலறினோமே
தண்ணீரில் முகம் நனைத்தோம் கண்களை நான்குதரம் சிமிட்டினாயே

வைத்தியசாலை செல்லாமலேவைத்தியனே நீ உறங்கினாயே
அழுதோம் அழுதோம் யாரும் வருவார்களா என அழுதோம்
அலைந்தோம் அலைந்தோம் ஒருவாகனத்துக்காய் அலைந்தோம்

யாதும் பலனின்றி யாத்திரை நீ சென்றாயே
எங்கு செல்வோம் இனி எங்கு செல்வோம்
வீரப்பார்வையும் வீரியப் பேச்சும் தலையில் தலைப்பாகையும்
முறுக்கு மீசையும் இனி எங்கு நாம் காண்போம்

நாடிகனாக சிவாஜி வடிவிலும்
பாடகனாக சௌந்தரராஜன் வடிவிலும்
கவிஞனாக வைரமுத்து வடிவிலும்
நான் இரசித்தகாலம் இனி வருமோ

மந்திரம் உச்சரித்து வீரப்பார்வை பார்க்கும் போது
மாணிக்கமே உன்னில் மயங்கியவர் தான் எத்தனையோ...?
இசை மீட்டும் உன் கையும் பண்ணிசைக்கும் உன் குரலும்
இனி எங்கு நாம் காண்போம்..?

காயப்பா காயப்பா என நான் அழைக்க இனி யார் எனக்குண்டு
காலனவன் என்னை ஏமாற்றிவிட்டான்
சிறுவயதில் முற்றத்தில் கதை பேசியகாலம் தான் மறக்குமோ
உன் இறுதி நாளில் புலம்பினோம் அழுதோம் அழைத்தோம்
உன் ஒருவார்த்தைக்காய் காலடியில் காத்திருந்தோம்
பதிலேதும் இல்லையே பரிதவித்து நின்றோமே
மறக்க முடியாத நாளை தந்துவிட்டு
முருகனின் காலடியில் பணிசெய்ய சென்றுவிட்டீர்

என்றும் உன் நீங்கா நினைவில் தவிக்கும்

**– உன் பெறாமகள் இ. மனோஜா –**

---

துடியாடும் காவியமும் துடிப்பான ஓவியமும்
தீந்தமிழ் மந்திரத்தின் தீராத சொல்லழகும்
வடிவாகக் கூத்தாடும் வண்ணக் கலையெழிலும்
வில்லெடுத்து விளையாடி வீரத் தமிழ்பாடி
படியேறும் மேடையெல்லாம் பாவல்னாய் நடிகனாய்
பாரெல்லாம் பவனிவந்து புகழ்மணந்து கொண்டாடி
கொடிநீளக் கண்ணிகட்டி கொத்தாகப் பூத்திருந்து
கொட்டியாரம் தனைநீங்கிக் கொட்டுண்டு போனதேனோ?

# எனதருமை காயப்பா

அன்று ஆடி மாத புதன்கிழமை அதிகாலை பொழுது எழுந்து சீக்கிரமாக கதிர்காமம் செல்ல ஆயத்தமாகி காயப்பா, காயம்மாவிடம் சொல்வதற்குச் சென்றேன். இன்முகத்தோடு "சந்தோசமாக சென்று வாருங்கள்" என கூறி வழியனுப்பினார். அதுதான் என் காயப்பாவின் இறுதி வார்தையாக இருக்கும் என நான் எதிர்பார்த்திருக்கவில்லை.

வாகனம் வந்தாறுமுலை தாண்டி செல்கிறது. எனது அக்காவின் தொலைபேசி தந்த துக்க செய்தியோ வார்தையால் கூற முடியவில்லை. அனலில் இடப்பட்ட புழுப்போல் துடித்தோம். அதே வானகத்தை திருப்பி வீடு நோக்கி வந்தோம் ஆனாலும் மனதிலே நான் வணங்காத கடவுள் இல்லை. உங்கள் துக்க செய்தி பொய்யாக இருக்க வேண்டும் என்று நினைத்து கடவுளை வணங்கினேன். ஆனால் வீடு வந்ததும் கடவுள் என்னை ஏமாற்றியது உண்மையானது.

காயப்பா உங்களை என் பெரியப்பாவாக மட்டும் நான் பார்க்க வில்லை எனக்கு கவிதை, ஆக்கம், மந்திரம், மருந்து என அனைத்தையும் தரும் குருவாகவே மதிக்கின்றேன். நாம் நீண்ட நேரம் மந்திரங்கள் பற்றி உரையாடுவோம் அந்த தருணங்களில் நான் என்னை மறந்து மூழ்கி உங்களோடு கலந்துரையாடுவேன். காயப்பா உங்கள் பிரிவை நான் எப்படி தாங்குவேன்.

அம்மா சொல்லுவா நான் பிறந்ததும் என்னை முதல் முதல் தூக்கியது நீங்கள் என்று அதுக்கு என் அக்கா சொல்லுவார் அதுதான் இவன் மந்திரத்தில் இப்படி ஆர்வமா இருக்கான் என்று அவை மறக்க முடியாத தருணங்கள்.

என்றும் உங்களின் ஆசீர்வாதமும் அறிவுரையுமே என்னை வழிநடத்தும் என உம் நினைவில் என்றும் இருக்கும் உம் பெறமகன்.

**– இ. தக்ஷனன் –**

# எங்குகின்றேன் அப்பா...

அப்பா இனி எங்கு உனைக் காண்பேன்
ஆண் மகன் போல் - எந்நாளும்
உன் பின்னே நான் வருவேன்
இன்று என் முகம் காணாமல்
ஏன் அப்பா சென்றீர்

அம்மன் நகர் சேனையிலே - நாம்
சந்தோசமாய் இருந்த தருணங்கள்
இனி எப்போதுவருமோ....?
குருவிக் கூட்டில் வாழும் குருவிகள் போல்
களிப்பாய் இருந்த தருணங்கள் இனி வருமோ...?

சதிசெய்த கடவுள் உன் உயிர் பிரியும் முன்னே
என்னைப் பிரித்துவிட்டான்
இப்போது எல்லாம் நினைத்து அழுகிறேன்
பக்கத்தில் நீர் இல்லை

என்றும் உன் அன்பில் கலந்திருக்கும்

உன் அருமை
**– மகள் ரஜா, மருமகன் –**

# என்றும் உம் நினைவில்

நாம்
முற்றத்தில் கதை பேசியநாட்கள்
ஜென்மங்கள் பலஎடுத்தாலும்
எப்பொழுதும் அழியாதது

பாட்டிலே பரவசமும் நடிப்பிலே நவரசமும்
நாயகனாய் திகழ்ந்த நர்த்தனநாயகன்
ஒன்றாய் கூடி குலாவியகாலம் இனி எங்கு வரும்

எப்பொழுது என்ன உணவு செய்தாலும்
உம்மிடம் கொண்டு வருவோம்
இறுதியில் நீர் விரும்பிய உணவை
தரமுடியாமல் போனது இறைவன் சதியோ

உம் குடும்பம் எம் குடும்பம் என பிரித்தது இல்லையே
ஒருகுடும்பம் போல நாம் வாழ்ந்தகாலம் மறக்குமோ
இறுதியில் ஒன்றாக சமைத்து உண்டு
களித்தகாலம் கண்ணோரம் நிற்கிறது.

நீங்கா துயரில்
**– மைத்துனி திலகராணி இரத்தினகுமார் –**

# மருதநகர் புவனேஸ்வரி அம்மன் கும்மி

1. சேனையூர் என்று திகழ்ந்திடும் ஊரிலே
ஞான முதல்வனை தாழ்பணிந்தோம்
ஞானம் இசைத்தே திருக்கும்மி பாடிட
புவன கணபதி காப்பாமே.

2. பேர்பெற்று ஓங்கி பெரும்புகழ் கொண்ட நம்
சேனையூர் என்னும் திருப்பதியில்
கார்குழல் கொட்ட நல் கருணை விழியினால்
ஊர் வந்தமர்ந்த உத்தமியை
சீருடன் நல் தமிழ் சேர்ந்தே
பாடி நடித்திங்கு ஆடுங்கடி
பயற்கொடியாழ் புவனேஸ்வரி மேல்
திருக்கும்மி பாடி ஆடுங்கடி.

3. ஆற்றங் கரையிலே வந்தமர்ந்தாள்
நல்ல ஊத்தடி தேடி உறைந்திருந்தாள்
ஆற்றல் பலத்தினை தந்திடுவாள்
இங்கு அனுகிநோர் துன்பத்தை போக்கிடுவாள்
போற்றிப் பணிந்திங்கு அருள் பெறுவோம்
புவனேஸ்வரித் தாயை புகழ்ந்திடுவோம்
பாற்கடல் மீதிலே பள்ளிகொண்ட கரன்
தங்கையைத் தான்புகழ்ந்தாடுங்கடி

4. ஆதிகிலனுடன் வீற்றிருப்பாள் இங்கு
அணிகினோர் துன்பத்தை தீர்த்து வைப்பாள்
சோதிவடிவாகி அருள் தருவாள்
துன்பங்கள் போக்கி துயர் கலைவாள்
நீதி நெறிமுறை காத்திடுவாள் - பொல்லாத
நீசரை வீழ்த்திடுவாள்
மாதுமையாள்தனை தாழ்புகழ்ந்து
மகிழ்ந்து கும்மியடியுங்கடி

5. அங்குச பாசம் ஏந்திடுவாள்
அபயம் அழித்தெமைக் காத்திடுவாள்
குங்குமத்திலகம் அணிந்திருப்பாள் - அவள்
மங்காப் புகழுடன் வீற்றிருப்பாள்
பங்கயம் மீது அமர்ந்திருப்பாள்
பக்தரைக் காத்து அருள் கொடுப்பாள்
அங்கயக் கன்னியைத் தான்புகழ்ந்து
ஆடிக்கும்மியடியுங்கடி.

6. மாதுழம் பூனிற மேனியாம் அவள்
மங்கை சிவகாமி பேரொழியாம்
ஆதியில் தோன்றிய சங்கரியாம் - இந்த
அகிலத்தைக் காத்திடும் புவனேஸ்வரி
பாதிசிவனுடன் பாகம் கொண்டாள் - நல்ல
பக்தரைக் காத்தருள் செய்திடுவாள்
சக்தி அருள் தினம் வேண்டுமென்று சொல்லி
கைதட்டிக் கும்மி நின்றாடுங்கடி.

7. மருதநகர் உறை மாமயிலாம் - நல்ல
கருணை விழிகொண்ட காரிகையாள்
திருவருள் செய்திடும் தேவியவள் - தினம்
செல்வத்தை அள்ளித் தினம் தருவாள்
பெருமை தனையிங்கு நாம் புகழ்வோம்
அவள் அருமை தனைத்தினம் பாடிடுவோம்
மங்கையர் கும்மி அடியுங்கடி - அவள்
மாண்புகழ் சொல்லியடியுங்கடி.

8. நோய்நொடி தீர்த்து தினம் காப்பாள்
நாம் நுட்பமாய் வாழ வழிவகுப்பாள்
பேய்பலி பூதங்கள் ஓட்டி வைப்பாள்
பெரும் பகை தன்னை விலக்கிடுவாள்
தாயவள் போலெமை ஆதரிப்பாள்
தரணி மீதிலே காத்திடுவாள்
நாரணி பூரணி காரணியைத் தினம்
பாடியே கும்மியடியுங்கடி.

9. கண்நோய் புண்நோய் தீர்த்து வைப்பாள் - கொடும்
கடும் விசம் தன்னை இறக்கி வைப்பாள்
கண்ணொழி தந்தெமைக் காத்திடுவாள்
அருள் விண்ணொழியாகி விளங்கிடுவாள்
பண்ஏழில் கொண்டு பாடிடுவேன் - தினம்
பரவி நின்று தினம் ஆடிடுவோம்
மின்னிடை கொண்ட நல் மங்கையரே
விளங்கிடக் கும்மியடியுங்கடி.

10. வஞ்சகர் தம்மை அடக்கிவைப்பாள் - எம்
நெஞ்சகம் தன்னில் நடம் புரிவாய்
தஞ்சமென்றே உன்னைத் தாழ்பணிந்தால்
தாயாகி வந்தெனை யாதரிப்பாள்
கம்சன் தனைக்கொன்று நெஞ்சைப்பிளந்தவர்
தங்கச்சியே உனைத் தாழ்பணிந்தோம்
பஞ்சம் பசி இன்றி வாழ்ந்திட வேண்டி
வஞ்சியரே கும்மியடியுங்கடி.

இயற்றியவர் :-

**கலாபூசணம் கா. வீரசிங்கம்**

# உன்னிடத்தில் நான்....

என்னவனே உனை நான் கரம் பிடித்த நாள் முதலாய்
நாம் பட்ட கஸ்ரங்கள் எத்தனையே
பெற்ற இன்பம் எத்தனையோ
நான் மணியாக நான்கு செல்வங்களைப் பெற்று
நாம் வாழ்ந்தகாலம் இனி வருமோ...?

உன் பிரிவு என்னை வாட்டிவதைக்குதைய்யா
உன் வதனமலர் காண மனம் துடிக்குதய்யா
உன் கம்பீர ஒலி கேட்க செவிகள் ஏங்குதய்யா

நீ இல்லாமல் உணவு உண்ணவில்லை
நித்திரை சொட்டும் இல்லை
நீ தூங்கும் இடத்தை நான் பார்த்து ஏங்குகின்றேன்
நீ அமரும் இடத்தை அனுதினமும் நோக்குகின்றேன்

நீ இல்லாத இவ்வுலகில் எனக்கு இனி
என்ன உண்டு
என்னை பிரிந்து சென்று விட்டீர்
என்றும் உன் நினைவில் நான்....!

உம் அருமை
**– மனைவி –**

# காலம் எல்லாம் உங்கள் நினைவில்...

அப்பா என்ற சொல்லுக்கு அர்த்தம் சொன்ன நீங்கள் எப்போதும் எங்களோடு இருப்பீர்கள் என்று நினைத்தேன். ஆனால் அது தப்பாகிப் போய் விட்டதே. மூத்த மகளாய் நான் இருந்து முழு மனதுடன் உங்களைப் பார்த்தேன் ஆனால் பாரா முகமாகி போனதேன் அப்பா

ஆவணி விடுமுறை வந்த உடன் உங்களை வைத்தியசாலை கொண்டு சென்று உங்கள் நோயைக் குணமாக்க வேண்டும் என்று மனதிலே நான் நினைத்தேன். நினைவே கலைந்து போனதேன் அப்பா. நான் எங்கு சென்றாலும் உங்கள் ஞாபகம்தான் எப்படி உங்களைக் குணமாக்குவேன் என்று இப்படி இருந்த வேளையில் தான் அன்று காலையிலே நீங்கள் நித்திரையில் இருந்த வேளையில் உங்களை நான் எழுப்பி மருந்து கொடுத்த போது அதை நீங்கள் வாங்கிக் குடித்தீர்கள் நீங்கள் குடிக்கும் போது நாள் நினைத்தேன் இந்த மருந்து உங்களை குணமாக்கும் என்று மருந்தைக் கொடுத்து விட்டு பள்ளி சென்ற வேளையிலே என் மூத்த மகள் ஓடி வந்தாள். "அம்மா அய்யா பேசாமல் இருக்கின்றார்" என்று என் இதயம் ஓர் கனம் நின்றது நான் எப்படி வீடு வந்தேன் என்பதும் எனக்கு தெரியவில்லை ஒடிவந்து உங்களைப் பார்த்தவேளை என் கற்பனை எல்லாம் கலைந்து போனது. காலம் எல்லாம் உன் நினைவால் வாடும் உன் மூத்த மகள் செல்வி.

மகள்

**– செல்வி –**

# அப்பாவுடன் சில நிமிடங்கள்

அப்பா என்றவுடன் என் மனதில் வருவது அன்புதான். பாடத்தை ஊட்டி நேசத்தை காட்டி எனை வளர்த்தீர்களே. ஐந்து வயதில் எனக்கு வந்த ஆஸ்மாவை அடியோடு மாற்றியது நீங்கள்தானே அப்பா அன்றுதான் புரிந்தது நீ ஒரு வைத்தியன் என்று.

வினோதவிடைப் போட்டியில் எனை முருகனாக அலங்கரித்து பார்த்து ரசித்தவரும் நீங்கள்தான் அப்போது புரிந்து கொண்டேன் நீ ஒரு ஒப்பனையாளன் என்று.

பள்ளிப்பருவத்தில் ஆக்கவேலை செய்து வரச் சொன்னால் முதல் சமர்ப்பிக்கப்பட்டது நான் தானே அப்பா அப்போது கண்டேன் உன்தன் கைவண்ணத்தை.

எத்தனை கலைகள்
எத்தனை வீரச்செயல்கள்
அத்தனையும் கொண்டவர்
நீங்கள் தானே அப்பா!

O/L படித்து A/L முடித்து College முடித்து வந்த போது உங்கள் முகத்தில் கண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. "எனக்கென்ன கவலை என்ற மகள் வந்துவிட்டாள் வேலையும் கிடைச்சிட்டு வீடொன்றை கட்டி நிம்மதியாக இருப்பன்" என்று நீங்கள் கூறிய வார்த்தைகள் மறக்க முடியுமா? வீடு கட்டி முடிக்க முன்னரே திருமணத்தைக் கட்டி வைத்து விட்டீர்கள். வீடு இருந்திருந்தால் உங்களை விட்டு பிரியாமல் இருந்திருப்பேனே? விதியின் சதியாள் விலகினேன் உங்களை விட்டு.

அப்பா என்ற உடனே என் அடிவயிறு பற்றி எரிகிறது. அன்று தானே உங்களோடு ஆசை வார்த்தை கதைத்து நெடுநேரம் இருந்து விட்டு சென்றேன். சென்ற இரு நாளிலே ஆலமரம் அடியோடு சாய்ந்த செய்தி கேட்டு அலறி அடித்து ஒடி வந்தேன். அடிக்கடி வந்து உங்களைப் பார்த்து வந்த நாள் சில வேளைகளில் வரும் நிர்ப்பந்தம் ஏன் வந்தது.

எத்தனை கஸ்ரங்கள் என் வாழ்வில் அத்தனையும் உங்களைத் தானே பாதித்தது அப்பா நான் நோயுற்றதால் நீங்களும் நோயுற்றீர்கள்.

தங்கம் தங்கம் என்று என்மகனை தவிப்போடு அழைப்பீர்கள் அந்த தங்கத்தை நான் காட்டுவதற்காக ஓடி வருவதற்கு எத்தனை போராட்டங்கள் எத்தனை போராட்டமும் அடியோடு அழிந்து விட்தே அப்பா.

வீடு வீடு என்று நீங்கள் கண்ட கனவு என் வீட்டிற்கு அழைத்து செல்ல முடியாது. போய் விட்டது ஏனோ. வீட்டுவேலை தொடங்கிய நானிலிருந்து என் மேல் விழுந்த இடிகளோ கொஞ்ச நஞ்சமில்லை. அதையும் மீறி நான் எடுத்த முயற்சி அடிமோடு வீழ்ந்து விட்டதே. ஆளுக்கும் தெரியுமா புரியுமா? நான் உங்கள் மீது கொண்ட அன்பு மாறாது மறையாது நாள் மண்ணில் புதையும் வரை......

**குட்டி மகள் காயா**

**குட்டி மருமகன் ஜெயக்காந்தன்.**

---

# ஐயா எங்கு சென்றீர்

ஐயா எமை விட்டு எங்கு சென்றீர்
நீர் இன்றி இனி வாழ்வது எப்படி
உம்மை பிடித்து நடந்த கைகள் தவிக்கிறது

சிலவேளை நாம் உம் மேல் கடிந்ததும் உண்டு
அதை கூட பெரிதாக நீர் எடுத்ததே இல்லை
பிள்ளைகளுக்கு அடித்தால் நீர் வலியில் துடிப்பீர்
பிள்கைள் இழுகிறோம் ஏன் எழுந்து வரவில்லை

ஐயா ஐயா பேரப்பிள்ளைகள் நாம் அழைக்கிறோம்
நாங்கள் உங்களைப் பார்ப்போம் வாருங்கள்
கலைகளுக்குப் பிறந்த கலைமகளே கலங்க வைத்து சென்றதேனோ
உம் பிரிவில் வாடும்

பேரப்பிள்ளைகள்

**– ரூபி, பகலவன் –**

# நவரச நாயகன்

நவரசத்தின் நாயகனே
நன்மதிப்பின் அடையாளமே
பல்துறையின் ஒளிவிளக்கே
பவளம் போன்ற கவி வடிப்பே
கலாபூசணமாக உயர்வாகினாயே
கலைஞர்களுக்குள் முதல்வனாகினாயே
பல்லாயிரக்கணக்கான பல்துறையின்
பதிவாளனாகினாயே
பண்பே இசையையே உன்
உயிராக நினைத்தாயே
வில்லுப்பாட்டுக்கே சொந்தக்காரனாகினாயே
விளையாட்டுப் பிள்ளைகளின் செல்லப்பிள்ளையாகினாயே

புவனேஸ்வரியின் மைந்தனாய்
அவதரித்தாயே
புவனம் எல்லாம் அவள் அருள்
பரப்பினாயே
தலைப்பாகை கட்டி நடக்கையிலே
அந்த தலைப்பாகைக்கே பெருமை சேர்த்தாயே

மந்திரங்களின் உச்சரிப்பே
உன் மகத்தான எடுத்துரைப்பே
கையிலே வேலினை கரம் பிடித்தாயே
அதன் அருள் கண்டு மனம் மகிழச் செய்தாயே
எத்தனையோ எத்தனை சேவைதனை செய்தாயே
எல்லாவற்றையும் நினைவில் வரவைத்தாயே
காலங்கள் சென்றாலும் அழியாமல்
காத்திருக்கும் உன் சேவையே.

"அப்பா என்று அழைக்கின்றேன்
உங்கள் குரல் கேட்க ஆவலாய்"

இப்படிக்கு உங்கள் பேத்தி
**– செ. வாகினி –**

# உங்கள் நினைவுகளுடன் மாமா....!

மாமா உங்களை இறுதியாகப் பார்க்கும் வரம் கிடைக்கவில்லை
மாமா உங்கள் பிரிவை நான் தனியாக அனுபவிக்க வேண்டி உள்ளது
மறக்க முடியாத நினைவுகளைத் தந்து சென்று வீட்டீர்கள்
மனதிலே கவலைகொண்டு தினமும் அழுகின்றேன்

உங்கள் முகம் பார்க்கவில்லை
உங்கள் ஒலி கேட்கவில்லை
உங்களை இறுதியாகப் பாரக்கும் கொடுப்பனவை
இழந்து தவிக்கின்றேன்...!

மாமா என்றும் உங்கள் நினைவில்
வாடும் மருமகன்.

– ஜெயக்காந்தன் .கு –

# அன்பு மாமா!

எத்தனை எத்தனை கனவுகள் ஆசைகள்
எப்படியெல்லாம் பார்க் வேண்டும் என ஆசைகள்
அத்தனையும் மண்ணாகப் போய் விட்டதே மாமா

புது வீடு கட்டி புது வாழ்வு வாழ என
புதுக் கனவுகள் கண்டதெல்லாம்
வீணாகப் போய் விட்டதே மாமா
கடல் நடுவில் சிக்கிய படகு போல
கலங்கரை தெரியாமல் தவிக்கின்றேனே

என்றும் உங்களைப் பிரிந்த துயரில்
உங்கள் கடைசி மருமகன்

– க. ஜெயகாந் –

# அன்புள்ள தந்தையே

அன்பின் தந்தையே!
அறிவின் இருப்பிடமே
ஆயகலைகளின் அற்புதனே
ஆருயிர்த் தெய்வமே
இணையற்ற குருவே
இணைபிரியா என் உயிரே
உன்னைத் தொலைத்ததால்
உறக்கம் கெட்டுவிட்டேன்
ஊரார் போற்றும் உத்தமன் நீ
ஊக்கத்தால் உயர்வடைந்தாய்
என்றும் என் தெய்வம் நீ
எண்ணமெல்லாம் நிறைந்தாய் அப்பா
ஏசி ஒருபோதும் என்னை நீ
ஏங்கவைத்ததில்லை
ஐயா என்று என்பிள்ளைகள்
ஐயோ! இனி யாரை அழைப்பார்கள்.
ஐயம் ஏதுமின்றி ஆர்ப்பரித்த உன் குரலை
ஐயா இனி எப்போது கேட்பேன்.
ஒன்று மட்டும் நினைவிருக்கு
ஒப்பற்ற தெய்வம் நீ
ஓசையெல்லாம் உன்பாடல்
ஓங்கி ஒலிக்கின்றது
குவலயம் விட்டு உன்னை
கயவனவன் எடுத்துவிட்டான்
அவலப்படும் என்னை
அங்கிருந்து காணும் அப்பா

துன்பப்படும் வேளை
துயர் துடைக்க அருளுமப்பா
விடைபெற்று சென்று விட்டாய்
வீடு பேறு நீ அடைவாய்
வீரமுள்ள சிங்கமாய்
மீண்டும் எம்குடியில்
வந்துதிக்க வேண்டுமென்று
வேலவனை வேண்டுகிறேன்.
நீங்கள் செய்ய விந்தைகளை
எப்படி அப்பாமறப்பது
அப்படி மறந்தாலும் நீங்கள்
தலையசைத்ததை நான்
மறக்கவே மாட்டேனப்பா.
ஆத்மசாந்திக்காக அடி பணிந்து
வணங்குகின்றேன்

அன்புமகள்
**– சி. கார்த்திகா –**

---

தங்கத்தில் எடுத்ததில்லை தரம்பார்த்தும் தொடுத்ததில்லை - தமிழ்ச்
சங்கத்தைக் கடைந்ததில்லை சரிபார்த்தும் கடந்ததில்லை
புங்கமரத்தடியில் புதர்வெளியில் பொலிக்களத்தின் ஓரத்தில்
பறவையின் பேச்சொலியில் பனிதூங்கும் பூவிதழில்
பொங்கிடும் பூம்புனலில் புழங்கிடும் ஒலியாடி
புதுச்சொல் பொறுக்கிவந்து புதுமைகள் வடித்தெடுக்கும் - வீர
சிங்கத்தைப் போலொரு சீர்கவியைக் கண்டதில்லை
சொல்லாளும் ஆசுகவி செல்லிடாமற் போனதுவோ?

# மாமாவே உன் ஆத்ம சாந்திக்காய் சமர்ப்பணம்

காயமே இது பொய்யடா!
காற்றடைத்த பையடா!
காத்திருந்து காலன்
காவிக் கொண்டு போனது
உன் உயிரை மட்டுமல்ல
என் நின்மதியையும் தான்
காயம் மட்டும் கரைந்து விட்டது
வையத்தில் நீ விதைத்த வரலாறு
கரையாது மாமா
வில்லிசையும் சொல்லிசையும்
வையகம் உள்ளவரை நிலைக்கும்.
கலையுலகில் உன்னுடன்
கலந்து சென்ற நாட்கள்
குலையாத ஞாபகச் சின்னங்களாய்
நிலைத்திருக்கும் மாமா
மாண்புமிகு மாமனாய்
மறக்க முடியா தந்தையாய்
நன் மனையாளை எனக்களித்து
நல்லறம் தந்த தற்குருவே
தேனூறும் உன் அன்பு மொழி கேட்டு
தெவிட்டாத என் செவிகள்
பாலோடும் நதிக்கரையில்
பாசியோடு தவிக்கும் பாலகனாய்
பரிதவித்து கிடக்கிறேன் மாமா
பாதையை மூடி பறந்ததென்ன
பாவி எனக்கு பணிவிடை தருவாயா!
ஆவி புகினும் அன்பு மாமனே
ஓய்வின்றி உன் புகழை உச்சரிப்பேன்
ஆசிர் வதித்ததும் என் அன்புள்ள மாமனே
அத்மசாந்திக்காய் பிரார்த்திக்கின்றேன் மனையாளோடு
ஓம் சாந்தி ஓம்சாந்தி.

அன்புள்ள மருமகன்
**– S. சிவராசா –**

# சின்னண்ணா

சின்ன அண்ணா என்று அழைக்கும் என்பாசமிகு அண்ணனை இழந்த இந் நாட்களில் நாங்கள் சகோதரர்களாய் பிறந்து இச்சேனையூரில் கால் பதித்த தடங்களையும் நினைவுகளையும் மீட்டிப் பார்க்க நினைக்கின்றேன்.

எனது தந்தையாரான விஜயசிங்கம் காளியப்புவிற்கும், தாயாரான தங்கமுத்து என்னும் அழகு தேவதைக்கும் பிள்ளைகளாக யோகாம்பிகை, பாலசிங்கம், கமலாம்பிகை, வீரசிங்கம், சிவலிங்க நாயகி என்ற நானும் சுகமாகப் பிறந்து வளர்ந்தோம். நாங்கள் பஞ்சபாண்டவர்களைப்போல அன்பாகவும், பண்பாகவும் வளர்க்கப் பட்டோம். தகப்பனார் இறந்த பிற்பாடு எனது தாயாரையும், என்னையும் வளர்த்து பாதுகாக்கும் பொறுப்பு என் சின்னண்ணனிடமே கொடுக்கப் பட்டது. எத்தனையோ கஷ்டங்களின் மத்தியில் என்ன அவர் வளர்த்தார். என்னைசேனையூரில் படிக்க வைத்தது மாத்திரம் அன்றி திருகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயத்திலும் படிக்க வைத்தார். எனது திருமணத்தையும் நடத்தி வைத்து எனது பிள்ளைகள் மீதும் பாசம் வைத்திருந்தார். எனது தந்தையாரிடம் இருந்த அத்தனை திறமைகளையும் தனக்குள்ளே வளர்த்துக் கொண்டு இன்று இவ் ஊரிலே பல்திறமை வாய்ந்த ஒரு கலாபூசணமாகவும் திகழ்ந்தார்.

அதுமட்டுமன்றி தனது மனைவியுடன் இல்லறம் நடாத்தி நான்கு பெண் பிள்ளைகளைப் பெற்று இறுதி வரையும் சந்தோசமாக வாழ்ந்து வந்த எனது பாசமிகு சின்னண்ணாவை நானும் எனது பிள்ளைகளும் என்றென்றும் மறவோம்.

அன்புச் சகோதரி

**– சிவலிங்கநாயகி –**

**[சின்னவள்]**

# மாமாவின் நினைவுகள்

ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஒன்பதிலே
ஆண் சிங்கமாய் புரட்டாதி மாதத்தில்
ஏழாம் நாளிலே அவதரித்திட்டீரே.
வீரம் நிறைந்த சிங்கமாய் என்றும்
பவனி வந்தீரே
பெற்றோருக்கு மகனாய்
கொண்ட மனைவிக்கு துணைவனாய்
பிள்ளைகளுக்கு பாசமிகு தந்தையாய்
தோழனாய் வாழ்ந்தீரே.
அண்ணன் என்று அழைக்க - உன்
ஆசைத் தங்கை ஒரு புறம்,
மாமா என்று அழைக்க - உன்
மருமகன்மார் ஒரு பக்கம்
தாத்தா என்று அழைக்க ஏழு
பேரக் குழந்தைகள் ஒருபக்கம்
தரணியிலே சிறப்புற வாழ்ந்து வந்தீரே
கற்றவை சில கல்லாதவை பல கொண்டு
கலைகளில் ஈடுபட்டு மகிழ்ந்தீரே
உமக்குத் தெரியாத கலைதான் - இவ்
உலகத்தில் ஏதய்யா
தெரியா என்ற வார்த்தையையே உம்
அகராதியில் இருந்ததில்லையே
இசையா, நடனமா, நாடகமா, வைத்தியமா, சோதிடமா, மந்திரமா,
சிற்ப வேலையா, நாதஸ்வர கலையா
ஓடாவியா... என எத்தனையோ உருமேற்
கொள்கை உன் உடலிலே!
நீங்கள் பிரிந்தபோது - உம்
இரத்தங்கள் இங்கு துடித்ததைய்யா
இனி எங்கு காண்போமோ என ஏங்கும்
உங்கள் மருமக்கள்!

மருமகள்

**– கஸ்தூரி தயாபரன் –**

# கருவிலே திருவுடைய காளியப்பு வீரசிங்கம்

"தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று" - என்று கூறிவைத்தார். வள்ளுவப் பெருந்தகை. இவ்வுலகில் மனிதனாகப் பிறந்தால் புகழ் பொருந்த வாழவேண்டும். அப்படியில்லையென்றால் பிறக்காமல் இருப்பதே மேலானது. என்பது இக்குறட்பாவின் அரும்பொருளாகும். இப்பொருள் விளங்க வாழ்ந்தவர்தான் எங்கள் வில்லுப்பாட்டு வீரசிங்கம் அவர்கள்.

இவர் இளமையிலேயே தனது கலைத்திறமைகளைக் காட்டத் தொடங்கியவர். 1939ஆம் ஆண்டு காளியப்பு, தங்கம்மா தம்பதியருக்கு இளைய ஆண்பேறாகக் கிடைத்தவர், இவருடைய தந்தையார் காளியப்பு அவர்கள் அம்மச்சி அம்மன் முன்னாள் பூசகராவார். காளியப்பு வீரசிங்கம் அவர்கள் 1965 காலப்பகுதியிலேயே சேனையூர் வர்ணகுல விநாயகர் ஆலயம், கட்டைபறிச்சான் கற்பக விநாயகர் ஆலயங்களில் நடைபெறுகின்ற திருவிழாக்களில் அன்ன ஊஞ்சல் பாட்டு, திருவெம்பாவை பாடல் பாடுதல், மேடைநாடகங்களில் நடித்தல் முதலியவற்றில் ஈடுபாடுடையவராக இருந்தார். இக் காலப்பகுதிகளில் கற்பகவிநாயகர் ஆலய முன்றலில் வில்லுப் பாட்டு நிகழ்வை முதன் முதலாகக் கண்டு களித்தோம் "தந்தனந்தம் என்று சொல்லியே வில்லினில் பாட" என்று தொடங்கிய நிகழ்வு, மங்களம், ஜெயமங்களம், என்று தொடங்கும் பாடலோடு நிறைவடைந்தது. இவ்வில்லுப்பாட்டு நிகழ்வில் "முத்துச்சம்பா அரிசி குற்றி முறையாக ஆக்குடி உன் மச்சான் வந்து இருக்கிறான்டி வந்து பாரடி என்ற வரிகள் மட்டும் எனக்கு நினைவிருக் கின்றன. கட்டைபறிச்சானில் முன்பிருந்த மரப்பாலம் பழுதடைந்தபின் தற்போதுள்ள பாலம் கட்டப்பட்டது. இப்பால வேலை நடை பெற்றுவருகின்றகாலத்தில் இப்பாவத்தின்மேல் மீன்கள், இறால்கள் துள்ளிப்பாயும், இப்படி அதிகமாகப் பாய்கின்ற காலத்தில் எமது ஊரவர் பாலத்தின் மேல் இருந்து இறால்களையும், மீன்களையும், ஆவலோடு பிடிப்பதில் ஈடு பட்டனர். இந்நிகழ்வை: வீரசிங்கம் அவர்கள்

வேட்டைக்காரன் படத்தில் வரும் வெள்ளி நிலா முற்றத்திலே என்ற மெட்டில் மிக அழகாகப் பாடினார். இப்பாடல் எல்லோர் கவனத்தையும் கவர்ந்தது). கட்டைபறிச்சான் பாலத்திலே கொக்குப்போலே குந்தியிருந்து துள்ளி விழும் இறால்கள் எல்லாம் கிளிப்பைக்குள் போட்டிடுவோம்" என்று தொடங்கி மிக அழகாகப் பாடினார், இப்பாடலுக்கு இரசிகர்கள் அதிகம் பேர் இருந்தனர். கட்டைபறிச்சான் கற்பக விநாயகர் ஆலயத்தில் வில்லுப் பாட்டு அரங்கு நிறைவடைந்தபின்பு, தான் வில்லுப்பாட்டுப் பாடக் காரணராக இருந்தவர் கிழக்கிலங்கைக் கலைஞர் மட்டக்களப்பு மாஷ்டர் சிவலிங்கம் அவர்கள் என்று இவர் கூறியபின்புதான் மாஷ்டர் சிவலிங்கம் என்றொரு கலைஞர் இருக்கிறார் என்பதை நாம் அறிந்தோம். எப்போ ஒரு நிகழ்வில் நாம் பார்த்த மறதி மங்கப்பர் வில்லுப்பாட்டு நிகழ்வில் மறதியுடைய ஒருவரின் நடவடிக்கைகளை நகைச் சுவை ததும்பக் கூறுவதாக அமைந்திருந்தது. 1971 காலப்பகுதியில் வெங்காயத் தட்டுப்பாடு நலவிய காலம் அக்காலத்தில் "வெங்காயந்தேடி ஊரெல்லாம் வந்தேன்" என்று பொன்மானைத்தேடி என்ற மெட்டில் பாடிக்காட்டினார். அப்பாடல் பலரின், வாயில் ஒலிப்பதைக் கேட்டிருக்கிறோம்.

1976 காலப்பகுதியில் தற்போதுள்ள கட்டைபறிச்சான் மூதூர் பாலம் கட்டுவதற்கென அப்போது தகவல், ஒலிபரப்பு உதவி அமைச்சராகவிருந்த ஏ.எல், அப்துல் மஜீத் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து சேனையூர் மத்தியகல்லூரியில் வரவேற்பு விழா நடைபெற்றது. விழாவில் இவரால் நிகழ்த்தப்பட்ட வில்லுப்பாட்டில் "போட்டாத்தாண்டா தெரியும் பாலம் என்ன சைசு என்று" என்று தொடங்கும் பாடல் எல்லோர் மனதையும் கொள்ளை கொண்டது. இந்த நிகழ்வு மீண்டும் இலங்கை வானொலியில் ஒலிபரப்புச் செய்யப்பட்டது. 1993ஆம் ஆண்டுகளில் தமிழ்ச் சித்திரைப்புத்தாண்டு திறந்தபோட்டி நிகழ்வுகளில் வில்லுப்பாட்டாளர்களில் நானும் ஒருவனாகச் சென்றிருந்தேன், அப்போது இவர்பாடிய "மைகளிலே எத்தனை தம்பி" என்ற பாடல் இப்போதும் என்காதில் ஒலிப்பது போல் உள்ளது சமாதானம் என்ற கருப்பொருள் அமைய நடைபெற்ற அவ்வில்லுப்பாட்டில் புத்தர் பெருமானின் பொன்மொழியாக வரும் அன்புதான் இன்ப ஊற்று அன்புதான் உலகமகா சக்தி என்று இவர் பாடிய பாடல் மிக அற்புதமானது, இப்பாடல் இவர் ஒருபல் சமய அறிவாளன் என்பதையும்

பறைசாற்றியது. நான் சேனையூர் மகாவித்தியாலயத்தில் கல்விகற்றுக் கொண்டிருந்த காலத்தில் 1969 காலப்பகுதியில் சேனையூர் மத்தியகல்லூரியில் நடைபெற்ற ஆங்கிலதினவிழாவில் ஆங்கில மொழியின் அவசியம் பற்றி அழகாக வில்லிசை நிகழ்தினார். இதில் ஆங்கில் சொல்லின் அர்த்தம் புரியாத ஒருவர் விளையாட்டுப் போட்டிக்குத் தனது மகனுக்கு ரண்ணிங் சூட் வாங்கி வரச் செல்லும்போது ரணிசூட் ரணிசூட் என மனப்பாடம் ஆக்கிச் சொல்லிக்கொண்டு மூதூர் புடைவைக் கடை நோக்கிச் சென்றதாகவும், இடையில் துறையொன்றைக் கடந்ததும் ரணிசூட் என்பதை மறந்து, கிணி சூட், கிணி சூட் என்று சொல்லிக் கொண்டுபோய் புடைவைக்கடையில் கிணிசூட் ஒன்று தாருங்கள் என்று கேட்க கடையில் இருந்தவர்கள், அது என்ன சாமான் கிணிசூட் என்று கேட்க என்னவோ எனக்குத்தெரியாது. பந்தடிக்கக்குள்ள போடுற முறுகத்தான். அதில் ஒன்று தாருங்கள் என்று கேட்டதாக இவர் கூறிய அந்தப் பாங்கு எல்லோரையும் சிரிப்பில் ஆழ்த்தியது, இப்படியாகப் பல நகைச்சுவை அரங்குகள் பலவற்றைக்கண்டிருக்கிறோம்.

1974 காலப்பகுதியில் மூதூர் ஆறுமுகம் அரங்கு திறப்பு விழாவுக்கு என, பிரபல எழுத்தாளரும் எனது இலக்கியப்பாட ஆசிரியருமான அமரர் வ.அ.இராசரெத்தினம் ஐயா அவர்கள் தயாரித்து நெறியாளுகை செய்யப்பட்ட "அவனும் ஒருதம்பி" நாடகத்தில் பால சுகுமார், வி. நவரெட்ணராஜா, கோ. ஸ்ரீ காந்தா, மூதூர் இ. சுகுமாரன் ஆகியோருடன் நானும் ஒரு வயோதிபர் பாத்திரம் ஏற்று நடித்தபோது எனக்குப் பாத்திரத்திற்கேற்றபடி சிறந்த ஒப்பனை செய்தார். 1979இல் சேனையூர் நடராசர் அரங்கில் மேடையேறிய "அமரேந்திரா" என்ற நீண்டநேர நாடகத்தில் இரா. இரத்தின சிங்கம், பாலசுகுமார், வி. நவரெட்ணராஜா, கா. வீரசிங்கம் முதலியோருடன் நானும் ஒரு வில்லன் பாத்திரம் ஏற்று நடித்தேன். இந்நாடகத்தில் முக்கியமான ஒரு புலவராக (கருவூர்தேவர்) வீரசிங்கம் அவர்கள் நடித்து நாடக அரங்கத்தைச் சிறப்புறச் செய்தமை என்னால் மறக்க முடியாது. 1986-2005 காலப் பகுதியில் சேனையூர் மத்தியகல்லூரியின் ஆஸ்தான தச்சர், ஆஸ்தான கலைஞர் என்று சொல்லத்தக்க அளவில் சேனையூர் மத்திய கல்லூரியோடு நெருங்கிய தொடர்புடையவராக விளங்கினார். இக்காலப் பகுதியில் கலை நிகழ்வுகளை வேறு விழாக்களுக்கு வேறு

இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு இவரோடு கூடச் செல்லும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்திருக்கிறது. சேனையூர் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. க.துரைரெட்ணசிங்கம் ஐயா அவர்களின் பிரியாவிடை நிகழ்வின் போது (1998) இவர் பாடிய "ஆலமரமே ஆலமரமே ஏன் அழுகிறாய்" என்றபாடல் எல்லோர் கண்களிலும் கண்ணீர மல்க வைத்தது.

இவரை நினைக்கும்போது பாரதியார் பாடிய கண்ணன் பாட்டில் :-

ஆடுதல் பாடுதல் சித்திரம் - கவி
ஆதியினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் - பிறர்
ஈன நிலைகண்டு துள்ளுவார் என்ற வரிகள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. காவடி ஆட்டங்கள், கரகட்டங்கள் பயிற்றுவித்தார். பல்வகைப்பாடல்களை மேடைகளில் பாடினார் பாட வைத்தார். சிற்ப வேலைப்பாடுகளை அமைத்தார். கவிதைகளை இயற்றினார். இசையமைத்தார். பல்வகைப்பட்ட கலைகளிலும் இவர் ஈடுபட்ட ஒரு பிறவிக்கலைஞர். இவரைப்போல் வாழ்ந்தால் பிறருக்கு நாம் ஈனமான செயல்கள் செய்வதில் சிறு பொழுதையும் வீணாக்க மாட்டோம்.

சேனையூர் எனும் வளம் பொருந்திய அழகிய ஊரில் பிறந்து வளர்ந்த அழகிய தமிழ்மகன் காளியப்பு வீரசிங்கத்திற்கு வில்லுப் பாட்டுத்திறன் மூலம் வில்லுப்பாட்டு வீரசிங்கம் என்று பெயர் வந்தது. எங்கள் பிரதேசத்தின் முதல் கலாபூஷணம் என்ற விருது பெற்ற பெருமை எங்கள் வில்லுப்பாட்டு வீரசிங்கம் அவர்களையே சாரும். சேனையூர் கட்டைபறிச்சான் பிரதேசத்தில் வாழ்ந்த, வாழ்ந்து விடுகின்ற சமூக முன்னோடிகளால் ஒழுங்கமைக்கப்பட்ட சகல விழாக்களிலும் அமரர்கள் விலுப்பாட்டு வீரசிங்கம் அவர் சிறப்புறக் கலை நிகழ்வுகளைச் செய்துள்ளார். எங்களூரின் முதன்மையான பிறவிக்கலைஞர் என்று போற்றத்தக்க அருகதையுடைய அருகதர் இவர். இவரிடம் இனத்து வேசம் கிடையாது. இவர் ஓர் ஊறவுப்பாலம், தச்சுத்தொழிலைத் தாணாகக் கற்றுக்கொண்ட திறமையாளன் மருத்துவர். மாந்திரீகர், ஆக்க பூர்வமான பொழுது போக்காளன், பூசகர் நடிகர், பாடகர், கவிஞர், இசையமைப் பாளர், மாதிரிவில்லிசை மன்னர், சமயோசித நாடக நடிப்புத்திறமையாளர்,

நகைச்சுவை மன்னர், இவருடைய திறமைகளை என் ஒருவனால் மட்டும் கூறிவிட முடியாது. பலராலும் போற்றப் படத்தக்க தகைமையுடைய இத்தகைமையாளரை கலை உலகம் உள்ளவரை மறக்காது. அன்றொரு நாள் அரசடிப் பிள்ளையார் ஆலய முன்றலில் அமைக்கப்பட்டிருந்த கலை அரங்கில் இவர் வெள்ளை வேட்டியும் முழுநீளக்கையுடைய நேஷனலுடன் கம்பீரமான தோற்றத்துடன் பக்கப்பாட்டுக்காறர்கள், பக்க வாத்தியக்காறர்கள் சூழ இருக்க வில்லிசை நிகழ்த்திய அந்த அருமையான காட்சியை என்னால் என்றும் மறக்க முடியாது. இப்படியொரு பிறவிக்கலை .... இனி எம்மூரில் எப்போது காண்போம்!

**– க. பழனிவேல்**
கட்டைபறிச்சான்.

---

காலப் பெருந்துயரின்
கல்லறையில் நின்றபடி
இந்த பாடல் உனக்காக
இசைக்கப்படுகிறது.

நீ
கொட்டியா புரத்தின் காற்று
உன்
சுவாசம் இல்லாததால்
இங்கு வற்றிப்போனது
கலைகளின் ஊற்று

## வீரசிங்கம் ஐயா

ஐயா, வீரசிங்கம் ஐயா
உம் புகழ் பாட
ஒருவனால் முடியாது ஐயா,
ஊரில் உள்ளோர் மட்டுமல்லர்
உம்மைத் தெரிந்தோர்
எல்லோரும் புகழுகின்றார்.
படித்தவர் மட்டுமல்லர்
பாமரரும் கூறுகின்றார்
ஒருதுனி உரைப்போம் என்றால்
உன்புகழ் நெஞ்சில்
வெள்ளமாய்ப் பாயுதையா
எதை மட்டும் ஐயா
யாம் கூறமுடியும்!
சமயோசித பாய்ப்பாடிய
நகைச்சுவை நிறைந்த
பாடல்களைப் பாடவா
கைத்திறன் மிகுந்த
கலைகளைக் கூறவா
மருத்தவத்தில் நீர் செய்த
மகிமைகளைக் கூறவா
தச்சுவேலை சுயமாய்க் கற்று
தனிப்பெருமை காட்டினீர்.
மயில் மலைக்குள வயலில்
நீர் இறைக்கும் பொறி செய்தீர்
மாதிரி வில்லுப்பாட்டுக்களை
மேடைகளில் காட்டி வைத்தீர்
தானாகப்பாட்டிசைத்து
இசை கூட்டிப் பாடி நின்றீர்
சூரன்போர் நிகழ்த்தி வைத்தீர்
சூரனையும் ஆக்கி வைத்தீர்
சூரனாகவும் நின்றீர்
சீரான தேரமைத்தீர்
பாவாணராய் இருந்தீர்
பக்தி வெள்ளம் பெருக வைத்தீர்
அம்மச்சி அம்மன் பூசகர்
அன்று அத்தக் காளியப்பு
பத்தினியம்மன் கோயில்
பூசகராய் நீர் இருக்கக்கண்டோம்.

**– க. பழனிவேல் –**

# வில்லொன்று கலகலத்து விண்ணேறிப் போனதுவோ...!

துடியாடும் காவியமும் துடிப்பான ஓவியமும்
தீந்தமிழ் மந்திரத்தின் தீராத சொல்லழகும்
வடிவாகக் கூத்தாடும் வண்ணக் கலையெழிலும்
வில்லெடுத்து விளையாடி வீரத் தமிழ்பாடி
படியேறும் மேடையெல்லாம் பாவலனாய் நடிகனாய்
பாரெல்லாம் பவனிவந்து புகழ்மணந்து கொண்டாடி
கொடிநீளக் கண்ணிகட்டி கொத்தாகப் பூத்திருந்து
கொட்டியாரம் தனைநீங்கிக் கொட்டுண்டு போனதேனோ?

தங்கத்தில் எடுத்ததில்லை தரம்பார்த்தும் தொடுத்ததில்லை - தமிழ்ச்
சங்கத்தைக் கடைந்ததில்லை சரிபார்த்தும் கடந்ததில்லை
புங்கமரத்தடியில் புதர்வெளியில் பொலிக்களத்தின் ஓரத்தில்
பறவையின் பேச்சொலியில் பனிதூங்கும் பூவிதழில்
பொங்கிடும் பூம்புனலில் புழங்கிடும் ஒலியாடி
புதுச்சொல் பொறுக்கிவந்து புதுமைகள் வடித்தெடுக்கும் - வீர
சிங்கத்தைப் போலொரு சீர்கவியைக் கண்டதில்லை
சொல்லாளும் ஆசுகவி செல்லிடாமற் போனதுவோ?

கல்கொண்டு எறிந்தாடக் கலகலக்கும் வெங்கலக்
கவிசொல்லும் குரலெங்கே குலலைந்து போனதையா?
சில்லென்ற கலைத்தென்றல் சீர்பாடி விளையாடி
சிந்தையிலே நின்றாடி சோர்ந்தெங்கே போனதையா?
சொல்நன்றாய்ச் சகசலத்து சிற்றருவி பாய்வதுபோல்
சுந்தரக் கவியொன்று சொர்க்கலோகம் போனதுவோ?
வில்லொன்று கலகலத்து விண்ணேறிப் போனதுவோ?
விடிகாலைத் தேரேறி விண்ணதிரப் போனதுவோ?

**– கொட்டிய ஆரன் –**

# ஆசப்பு காலமானார்

உயிர் ஒன்று அறுந்து போனது

என் அப்புச்சியின் தம்பியும் நாடறிந்த மகா கலைஞனும் கலா பூசணம் முதல் பல விருதுகளுக்கு சொந்தக்காரருமான வில்லுப் பாட்டு வீரசிங்கம் இன்று காலமானார்.

சேனையூரில் புகழ்பெற்ற விஜயசிங்கம் காளியப்பு பூசாரியாரின் மகனும், கற்பகம், விஜயசிங்கம், யோகாம்பிகை, பாலசிங்கம், கமலாம் பிகை, சிவலிங்க நாயகி ஆகியோரின் சகோதரரும் கமலாதேவியின் கணவரும் கலைச்செல்வி, ரஜானந்தி, கார்த்திகா, காயத்திரி ஆகியோரின் அன்பு தகப்பனும் ஆவார்.

இந்த துயரம் மிகு நாட்களை எப்படி என்னால் எதிர் கொள்ள முடியும் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் நான் போக முடியாத நிலமை. இனி எப்போ அவர் முகம் பார்பேன். ஏக்கம் நிறைந்த பெரு மூச்சு மட்டுமே எஞ்சி நிக்க கையறு நிலையில் நான்.

என்னை தூக்கி வளர்த்து கலைகளை சொல்லித் தந்து இந்த உலகுக்கு நாடகத்தால் அறிமுகப் படுத்திய அற்புத கலைஞன் அவர்.

சேனையூர் கட்டைபறிச்சான் மண்ணுக்கு பெருமை சேர்த்த மாண்புறு மனிதர் அவர். மறக்க முடியாத பதிவுகளை எம் மண்ணுக்கு சொந்தமாய் விட்டுச் சென்ற கலைத்தாயின் தலை மகன்.

தன் வசீகரித்த குரலால் கேட்போர் எல்லோரையும் கட்டிப் போட்ட காந்தமிகு குரல் வளம் கொண்ட இசை வல்லோன். சௌந்தரராஜனும் கோவிந்தராஜனும் கலந்த குரல் அவருக்கு.

கவிதையும் காவியமும் சிற்பமும் வைத்தியமும் மந்திரமும் நடிப்பும் நாடகமும் எழுத்தும் இசையும் என எண்ணிட முடியா கலை வல்லோன்.

எங்கள் ஊரில் நாடகம் என்பதற்கு அர்த்தம் தந்த அற்புத நடிகன். என் நடிப்பின் அரிவரி யவர்.

இன்று நம்மோடு இல்லை ஆசப்பு போய் வாருங்கள் உங்கள் கனவுகளை சுமந்து கண்ணீரோடு இறுதி அஞ்சலிகளோடு விடை தருகிறேன். காலம் விதித்த கட்டளை.

தமிழ் இன உணர்வும் ஈழ விடுதலை பற்றிய நேசிப்பும் நிறைந்த கலைஞன் தன் புரட்சிகர எழுச்சி பாடல்களால் விடுதலை உணர்வை விதைத்த மா கலைஞன்

என் வாழ்வின் எல்லாக் கணங்களிலும் நீங்கள் இருப்பீர்கள் எனக்கு ஒன்றென்றால் துடித்து போவீர்களே.

மனம் நடுங்க உங்கள் பாதங்களை தொட்டு அஞ்சலித்து நிற்கிறேன்.

என்றும் உங்கள் பாசத்துக்குரிய மகன்

**– பாலசுகுமார் –**

---

## மண்ணின் கலைஞன்

ஐயா வீரசிங்கமே
சேனையூர் கட்டைபறிச்சான்
மண்ணுக்கு பெருமை சேர்த்த
கலைஞனே

கவிதையும் காவியமும் சிற்பமும்
வைத்தியமும் மந்திரமும் நடிப்பும்
நாடகமும் எழுத்தும் இசையும் என
எண்ணிட முடியா கலை
வல்லோனே

பல விருதுகளைப் பெற்ற
சாதனையாளனே

உங்கள் பிரிவை எங்களால்
ஜீரணிக்க மடியவிலை

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிராரத்திக்கிறேன்.

பேரன்

**– சு. விஸ்வா –**

# கரகப்பாடல்

ஆடுங்கரகம் சுழலுதடி அம்மனுக்கு அபிஷேகப் பூசையடி - மாரி அம்மனுக்கு அபிஷேகப் பூசையடி ஆடுங்க பாடுங்க கூடுங்க சேருங்க அம்மனின் கரகம் ஆடுங்கடி (2)

ஆடுங்கரகம் சுழலுதடி அம்மனுக்கு அபிஷேகப் பூசையடி

1. கந்தனுக்குப் பாடுங்கடி கணபதியைப் போற்றுங்கடி
 வந்தவினைதீரும் என்று வழிபட்டு ஆடுங்கடி
 எந்த வினையானாலும் என்ன செய்யும் கூறுங்கடி
 மாரிமக மாயி காளி திரு சூளி (ஆடுங்கரகம் சுழலுதடி)

2. திங்கட் கிழமையிலே தேவிபுவனேஸ்வரிக்கு தேவிபுவ னேஸ்வரிக்கு
 பால்வழப்பூசை பக்தியோடு நடக்கிறது
 கேட்டவரமெலாம் தந்திடுவாய் எமைவாட்டும் இருள் நீக்கியெமைக்
 காத்திடுவாய் ஆடுங்க பாடுங்க கூடுங்க சேருங்க அம்மனின்
 கரகம் ஆடுங்கடி (2)

 (ஆடுங்கரகம் சுழலுதடி)

3. சண்டை ஓய்ந்திட வேண்டுமம்மா சாந்தி சமாதானம் வேண்டுமம்மா
 உந்தன் புகழ் ஓங்க வேண்டுமம்மா உலகில் இருள்
 நீங்கவேண்டுமம்மா
 மாரி மக மாரி சூலி திரு சூலி
 ஆடுங்க பாடுங்க கூடுங்க சேருங்க அம்மனின் கரம் ஆடுங்கடி
 (2)

 (ஆடுங்கரம் சுழலுதடி)

**– கலைஞர் வில்லுப்பட்டு வீரசிங்கம் –**

# வில்லுப்பாட்டு பாடல்கள்

தனி மரம் தோப்பாகுமா
இந்த தரணியில் ஒற்றுமைக்கு
நிகராகுமா ஓரிழை
இந்த உண்மையை உணர்ந்தால் பிரிவாகுமா
(தனிமரம்)

சாதி சமய சண்டை ஓய்ந்திடவேண்டும்
சமத்துவம் வாழ்வில் நிலைத்திட வேண்டும்
நீதி நிலைகள் என்றும் நிலைபெற வேண்டும்
நிம் மதியாய் மனிதன் வாழ்ந்திட வேண்டும்

நித்தம் நித்தம் அழிவதா
ரத்தம் சிந்தி வடிவதா
யுத்தம் நமக்குத்தேவையா
(தனி மரம்)

புத்த பகவான் போதனையில் என்ன சொன்னார்
புண்ணியம் கண்ணியம் ஜீவகாருண்ணியம் என்று சொன்னார்.
தியாக_சீலராம் யேசுநாதர் தன்னுயிர்
ஈந்தே மண்ணுயிர் காத்தார்.

கல்லெறி பட்டும் நபிநாயகம்
நல்ல கருத்துரை எமக்களித்தார் உலகத்திற்கு
யுத்தத்தால் ரத்தத்தால் அமைதியில்லை
பேனாவின் மையிலே அமைதி என்றார்.
(தனி மரம்)

மனிதராய் வாழ்வது என்றால் புனிதம் வேண்டும்
புனிதம் இல்லை என்றால் இந்த
பூமி அழிந்து போகும்
அவரவர் கடமையை அவரவர் செய்தால்
மனித மீறல் நடக்காது மண்ணில் கொடுமை மலியாது
(மனிதராய் வாழ்வது)

கணவனும் மனைவியும் புரிந்துணர்வோடு
ஒற்றுமையோடு வாழ்ந்தால்
மனித மீறல் நடக்காது
தந்தையைத் தாயை மதித்து நடந்தால்
மனித மீறல் நடக்காது
ஒழுக்கத்தோடு குழந்தைகள் வாழ்ந்தால்
மனித மீறல் வந்திடுமா.

(மனிதராய் வாழ்வது)

குருவை மதித்து சீடன் நடந்தால்
மனித மீறல் வராது
குருவும் தன் பணி சரியாய்ச் செய்தால்
மனித மீறல் வராது
குற்றம் செய்யும் குழந்தையை அடித்தால்
மனித மீறல் என்பார்கள்
குழந்தைகள் குற்றம் செய்யாதிருந்தால்
மனித மீறல் நடக்காது
(மனிதராய் வாழ்வது)

ஆண்களும் பெண்களும் சமனாய் வாழ்ந்தால்
அவணியில் சமத்துவம் ஓங்காதா
ஆண்களை உயர்த்தி பெண்களைத் தாழ்த்தும்
அவல நிலைதான் மாறாதா

(மனிதராய் வாழ்வது)

வெங்காயம் தேடி இந்த ஊரெல்லாம்
போனேன்
வெங்காயம் இல்லையடி என்ற ராசாத்தி
வெங்காய விலையைக் கேட்டாலே நெஞ்சு
இடியாக இடிக்குதடி
(வெங்காயம் தேடி)

கறிய சும்மா ஆக்குடி தானிச்சு
காலம் போச்சடி பசியோ உயிர்
வாட்டுது சோத்த ஆக்கிப் போட்டி ராசாத்தி
கோபம் வந்தா சட்டி பானையை
உடைக்கத் தோணுமடி
(வெங்காயம் தேடி)

நீ நல்லா மினிக்கிக் குளிச்சிக்க
மேனியை மெதுவா வைச்சுக்கோ
நானோ உழைச்சுக் களைக்கிறேன் .......
உண்டு கொழுத்துக்கோ ராசாத்தி
கோபம் வந்தா உன்னை அடிக்கத் தோனுதடி
(வெங்காயம் தேடி)

வளவு சும்மா கிடக்குது
காடு புடிச்சுக் கிடக்குது
வளவை கொத்திப் புரட்டணும்
பயிர் நாட்டி வளக்கனும் ராசாத்தி
ஆணும் பெண்ணும் சேர்ந்து உழைச்சா
அதிக லாபமடி
(வெங்காயம் தேடி)

# முகநூல் பதிவுகள்

**Gnanachelvam Ratnasingam** எங்கள் வீட்டில் தம்பலகாமத்தில் வீரபாகு தெய்வத்துக்கு மடை வைப்போம் ஐயா தான் பூசாரி 2016ம் ஆண்டு வந்து செய்து தந்தவர் இனி எங்கு தேடுவது என் உறவு ஐயாவுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

**Vinayakamoorthy Navaratnarajah**

அடேய் சுகுமார் உன் கைகளைப் பற்றிக் கொள்கிறேன். உன் தலை தடவி துக்கத்தைப் பகிர்ந்து கொள்கிறேன். அவர் ஆத்மா சாந்தி அடையட்டும். அவரோடு உலாவிய நாட்களை நினைத்து நினைத்துக் கதைக்க ஒரு இரவு போதாது. அவன் ஒரு நீண்ட நாவல். உன் துயரை நானும் பகிர்கிறேன்.

**Gopalasingam Poopalapillai**

எங்கள் இளம் வயதில் வில்லிசையின் ரசனையை உணரவைத்தவர் எளிமையோடும் சாந்தமானமுகத்தோடும் உலாவந்த அன்பான அண்ணன். அவர் ஆத்மா சாந்தியடைய வர்ணகுல பிள்ளையாரை வேண்டுகிறன்

**Ramalingam Ratnasingam**

சுகுமார், நீயும் நானும், நாமும் அவரும், வாழ்வும் தாழ்வும் மறக்குமாடா?

**Vimalendran Barathithas**

தமிழ்ப் பெருநிலத்தின் மகா கலைஞனுக்கு ஆழ்ந்த இரங்கல். கலைகளில் அவர் நிலைபெறுவா

**M Malligai Sundaram**

வில்லுப்பாட்டு கலைஞர் மறைவுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்

**Shanmuganathan Ramaneekaran**

கிழக்கு மாகாணத்தின் புகழ்பெற்ற கலைஞன். மாகாண தமிழ்த்தினப் போட்டிகள் இலக்கிய விழாக்களில் பணியாற்றிய போது இவரது படைப்புகளை காணமுடிந்தது. மிகவும் எளிமையான

தன்னடக்கமான கலைஞன். அன்னாரின ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன்.

**N Sritharan**

ஆழ்ந்த அனுதாபங்கள்.. அய்யாவின்... ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறட்டும்..

அவரிடம் மாணவனாக கலைபயின்ற நாட்கள் கண்முன்னே வந்து போகிறது..

எத்தனை ஆண்டுகள் ஆயினும் உங்கள் பெயர் நம் மண்ணில் நிலைத்திருக்கும்...

**அ. வெற்றிவேல்**

அஞ்சலிகள்.
உங்கள் துயரில் பங்கேற்கிறேன்

**Gopalasingam Poopalapillai**

எங்கள் இளம் வயதில் வில்லுப்பாட்டின் ரசனையைச் உணரச்செய்தவர் எளிமையோடும் சாந்தமானமுகத்தோடும் மனதில்நிறைந்த அன்பான அண்ணன் அவரின் ஆத்மாசாந்திக்காக வர்ணகுல பிள்ளையாரை வேண்டுகிறேன்.

**Jegatheesan Shandrasegaram**

எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங் களையும் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்

**Sivalingam Arumugam**

ஆழ்ந்த இரங்கல்கள்!
இதய அஞ்சலிகள்!!

**Paiwa Asa**

திருமலைமண் தனது கலை அடையாளமும்,
கணிப்புக்கும்
மதிப்புக்குமுரிய அற்புதக் கலைஞனுமான
வீரசிங்கம் அவர்களை இழந்துவிட்ட

செய்தி வருத்தமளிக்கிறது.
சீர்காழி கோவிந்தராஜனை
நினைவூட்டும் அற்புதக்
குரல் இனியெமக்குக் கனவுதான்.
அண்ணன் வீரசிங்கத்திற்கு மண்ணின் சார்பான
என் இதய அஞ்சலிகள்.

*1*

**Selvanayagam Srikrishnarajah**

சிறந்த கலைகளில் சுந்தரமான ஆளுமை கொண்ட வீரசிங்கம் ஆசப்பாவின் பிரிவுச்செய்தி அதிர்வைத் தருகிறது. நேரில்செல்லமுடியாத நிலைமை கவலையைத்தருகிறது. அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள். செய்தியைத்தந்த பேராசிரியருக்கு நன்றிகள்.

**Jeevarupan Jeeva**

மூதூரின் முத்து கலைகளின் சொத்து வில்லுப்பாட்டுக்கு விலாசம் கொடுத்த கிழக்கின் கலை வைரம் நாட்டுவைத்தியம் கிராமிய வழிபாடு என கணக்கில்லா சமூகசேவை புரட்சியின் பால் ஐயா புனைந்த பாடல் வரிகள் இன்னும் எனது காதில். "மறவர் படையே எழுந்திடு மானம் காக்க துணிந்திடு" வெங்கல குரலோன் எமை விட்டு தொலைதூரம் சென்றுள்ளார். சொர்க்கத்தில் சேர்ந்திருக்க இறைவனைப் பிரார்த்திப் பதோடு குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றேன்.

**Eazha Nila** ஆழ்ந்த அனுதாபங்கள் தமிழ்தேசிய விடுதலைக்காகவும் இவரின் பங்களிப்பு பாராட்டதக்கது.

**Yogarajah Rajeevan**

ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றேன்.

**Samithambi Punniamoorthi**

கலைப் பணியில் தடம் பதித்த கலைஞரின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபங்கள்.

**Ananthi Rahu**

Ananthi Rahu RIP.

**Manage Sounthararajan Muthucumar**

மூதூரின் முத்து கலைகளின் சொத்து எங்கள் ஐயா குடும்பத்தாருக்கு ஆழ்ந் அனுதாபத்தை தெரிவிக்கின்றேன்.

**Mohan Sithira**

திருக்கோணமலை மாவட்டத்தில்" வில்லுப்பாட்டின்" அடையாளம் ஐயாதான் "சேனையூர்" என்றாலே ஞாபகத்தில் உதிப்பது வீரசிங்கம் ஐயாதான். ஆத்மா சாந்தி பெற இறையருள் வேண்டுகிறேன் "அன்பே சிவம்"

**Thinesh Thavaraja**

ஐயாவுக்கு அனுதாபங்கள் (பேரன்)

**Ranga Devaraj**

மூதூர் நவரெத்தின மண்டபத்தில் பல இன்னிசை கச்சேரிக்கு சொந்தக்காரர் நம் வீரசிங்கம் அய்யா

**Ravichchandran Kulanthaiwadivel**

நான் சிறுவனாக இருந்தபோது அம்மமா அவரை "சின்னண்ணன்" எனக் கூப்பிடுவதனால் நானும் அவரை அவ்வாறே கூப்பிடுவேன். பிறகுதான் சின்னமாமா என அழைத்து வந்தேன். அவரோடு பழகும் வேளைகளில் அவர் என்னோடு மாமன் மருமகன் என்று பார்ப்பதில்லை. கடந்த மாதம் அவரை பார்க்க என் மனைவி மற்றும் அம்மாவுடன் சென்றிருந்த போது" நீங்கள் சுகமாக இருக்கின்றீர்களா?" எனக் கேட்டார். அது இன்னும் என் கண்முன்னே நிழலாடுகின்றது. அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**Yogaraja Yoga**

Yogaraja Yoga நாடறிந்த திறமைமிக்க கலைஞர் அஞ்சலிக்கிறேன்.

**Jananee Tharan**

வீரசிங்கம் ஐயாவுக்கு ஆழ்ந்த அனுதாபங்களும் அஞ்சலிகளும், ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

## Mohanathasan Kanthasamy

Mohanathasan Kanthasamy மிகச்சிறந்த அதே நேரம் வார்த்தைகளுக்குள் அடக்கிவிட முடியாத கலைஞர், இரண்டு தடவைகள் கும்ப விழாவிற்கு வந்திருந்தோம். இரு தடவைகளும் ஐயா நாதஸ்வரம் வாசிக்க நான் தவில் வாசிக்க... இன்னும் மனதோடு ஒட்டிக்கிடக்கின்றன அந்தப் பொழுதுகள். உங்களது புத்தக வெளியீட்டிற்காக சேனையூர் வந்தபோது, எம்மை ஆரத்தழுவிக்கொண்டார். அந்த அன்பின் பரிசம் இன்னும் குளிர்ச்சியாய் என்னோடு. அன்றைய தினம் தனது இனிமையான குரலினால் இறைவணக்கமும் நிகழ்த்தினார். ஐயா உங்கள் இழப்பை ஓரிரு பெருமூச்சுக்களுடன் மட்டும் கடந்து விட முடியவில்லை. உங்கள் ஆத்மா சாந்தி பெறட்டும்.

## Uthayakumar Ponnuthurai

Uthayakumar Ponnuthurai சிறந்த கலைஞர். 1996 இல் சம்பூர் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய அரங்கில், வீரசிங்கம் ஐயா தலைமையில் சத்தியநாதன், ஜெயதாஸ் ஆகியோருடன் நானும் இணைந்து தரமான வில்லிசையை நிகழ்த்தி அனைவரதும் பாராட்டைப் பெற்றதை என்றுமே மறக்க மாட்டோம். சம்பூர் நாடக கலா மன்றம் சார்பில் ஐயாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## Vasanthy Antony

Vasanthy Antony எதைக் கூறுவது நான் அறிந்தவரை சேனையூர் கட்டைபறிச்சான் மண்ணின் பெருமையை வெளிக் கொணர்ந்த மாபெரும் கலைஞர். அவரது ஆன்மா சாந்தியடைய வேண்டுகிறேன்.

## Sivapiragasam Manivannan

மாபெரும் கலைஞருக்கு வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்துக் குழு இலண்டன் கிளை சார்பாக ஆழ்ந்த இரங்கல்கள் நம் சிரம் தாழ்த்தி அஞ்சலிகள்.

## Ravi Tharshan

எங்களுக்கு வழிகாட்டியாகவும் வழிப்படுத்துனராகவும் இருந்தீர்கள். உங்கள் வாயார எனக்கு வாழ்த்துரைத்தீர்கள். உங்கள் இழப்பு எங்களால் சகித்து கொள்ள முடியாத ஒன்று நீர் இறையடி சேர்ந்தாலும் உம்மடி நடப்போம் ஐயா ஆழ்ந்த அனுதாபங்கள்

**Paadum Meen Srikantharajah**
*ஆழ்ந்த இரங்கலைச் சமர்ப்பிக்கின்றேன்! அவரின் ஆன்மா இறையடியில் இளைப்பாறட்டும்!*

**Kandeepan Ratnavadivel** என் சின்ன மாமாவின் இழப்பு ஈடு இணையில்லாதது எங்களோடு மிகவும் அளவு கடந்த பாசம் வைத்திருந்தார் என் அம்மாக்கு இளைய சகோதரர் அவரை பிரிந்து வாடும் மாமி மச்சாள் மார் உறவுகளோடு என் குடும்பமும் துயரில் பங்கு கொள்ளுவதுடன் ஆத்மா சாதிக்காக இறைவனை பிரார்த்திக்கிறோம்.

**Maunaguru Sinniah**
*மிகச் சிறந்த கலைஞர் அவர் குரலும் கற்பனையும் என்னை வசீகரித்துள்ளன.* சுகுமார் உங்கள் துயரச் சுமையை நானும் தாங்கிக் கொள்கிறேன்

**Muhunthan Sayanolibavan**
அந்தப் பிறவிக்கலைஞனுக்கு ஆழ்ந்த இரங்கல்கள்

**Devigaranee Murugupillai**
சிறந்த கலைஞர் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்

*3*

**வில்லுப்பாட்டு வீரசிங்கம்**

**வினாயகமூர்த்தி நவரத்தினராஜா**

இந்தச் சொல்லை மட்டும்
விட்டு விட்டு
அள்ளுப்பட்டுப் போனானே - அவன்
அள்ளுப்பட்டுப் போனானே
எண்ணம் மட்டும்
வைத்துவிட்டு
திண்ணை விட்டுப் போனானே - அவன்
திண்ணை விட்டுப் போனானே
சுண்ணம் இடித்தெடுத்து
சொட்டத்தலை தேய்க்க வைச்சி
எண்ணியதைச் சொல்லாமல்
அகமடங்கிப் போனானே - அவன்

4.

**எமது ஆணிவேரை இழந்து நிற்கின்றோம்**
**மனோ சன்.**

இனி எங்கு உன் முகம் காண்போம்

இனிய நாளை இழந்து விட்டோம்
மண்ணிலே வேரில்லா மரம் போலும்
விண்ணிலே வாலில்லா பட்டம் போலும்
இனி எங்கு உன் முகம் காண்போம்

நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும்
அன்றைய பாரதி உனக்காக உரைத்தானா ...?
தலைப்பாகை கட்டி நடந்து நீ வருகையிலே
தவப்பேறே உனை கண்டு, கொண்ட ஆசை எத்தனையோ ....?

மந்திரம் உச்சரித்து வீரப்பார்வை பார்க்கும் போது
மாணிக்கமே உன்னில் மயங்கியவர் தான் எத்தனையோ ....?
இசை மீட்டும் உன் கையும் பண்ணிசைக்கும் உன் குரலும்
இனி எங்கு நாம் காண்போம் ......?
உன் இறுதி நாளில் புலம்பினோம் அழுதோம் அழைத்தோம்
உன் ஒரு வார்த்தைக்காய் காலடியில் காத்திருந்தோம்
பதிலேதும் இல்லையே பரிதவித்து நின்றோமே
மறக்கமுடியாத நாளை தந்துவிட்டு
முருகனின் காலடியில் பணி செய்ய சென்றுவிட்டீர்
அகமடங்கிப் போனானே

**Balasingam Sugumar**

என் ஆசப்பாவின் இழப்பில் என்னோடு இணைந்த எல்லோருக்கும் என் நன்றிகள் அந்த மா கலைஞனை கொண்டாடுவோம்

**Balasingam Sugumar**

Balasingam Sugumar அந்த மா கலைஞனின் இறுதி நிகழ்வுகள் நேற்று 25.07.18 புதன்கிழமை மாலை 5 மணிக்கு சேனையூரில் பல்லாயிரம் மக்களின் அஞ்சலியுடன் கண்ணீரில் சங்கமமாகியது எல்லோருக்கும் கோடி முறை நன்றி சொல்வேன்

**Murugesu Natkunathayalan**

இழப்புகளுக்கு விலையேதுமில்லை. துயரம்தான் எஞ்சி நிற்கிறது. கண்ணீரே தேற்றம் ஆகிறது.

**Kalirajah Mathivathanam**

அந்த மகா கலைஞனின் மறைவில் நானும் கவலைகொண்டுள்ளேன். என் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**Jeyakumar Ganeshapillai**

இச்செய்தி கேட்டு எம் இதயம் கனத்துப்போனது. எம்மூரின் எம் மூத்த தலை முறையினரின் இழப்புக்கள் நெஞ்சை வறட்டுகின்றது. அவரின் கலைகளையும், திறமைகளையும் சிறுவயதிலிருந்து அறிந்தவனென்ற முறையில் அவரின் திறமைகளுக்கு தலைவணங்குகின்றோம்.

அவரது ஆத்மா சாந்தி அடைய எமது குடும்பத்தார் அனைவர் (Denmark வாழ்) சார்பாகவும் இறைவனைப்பிரார்த்திப்பதுடன், அவர் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**Nadesalingam Sabapathippillai**

மண்ணின் மைந்தன் மறையவில்லை
எம்முடனே உள்ளார்

களப்பூர் தங்கா மிகக் கவலை தரும் தொலை தூரச்செய்தி. இன்னமும் இன்னமும் எத்தனை கலை முத்துக்களை அள்ளாமல் அளையாமல் தொலைக்கப் போவதை நினைத்து மாள்கின்றது மனம், நானும் தோய்கின்றேன் உங்கள் துன்ப முழுக்கில் மாத்து உடுத்தாவிட்டலும்.

விடியல் தமிழ்

**Friends with Arumugam Thangavelautham**

ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன். குடும்பத்தாருக்கு எங்கள் ஆறுதல்கள். எங்களின் மிகவும் நெருங்கிய சொந்தக்காரர்.

**2. தமிழின் சொத்தானவர்!**

**சி.வி.நீதன்**

வித்தைகளின் வித்தானவர்!
பல்கலை விற்பன்னர்!

தமிழ் காத்த காத்தவராயர்!
என் தந்தையோடு இணைந்து
இசைக்கழக தொண்டாற்றிய
இன்னிசை விற்பன்னர்!
கலைகளின் கலாபூசணம்!
சேனையூர் மண் பெற்றிட்ட வரம்!
ஐயா வீரசிங்கம்
அரும்பணித் தமிழ் செய்து
அயர்வாகி ஆண்டவன் பாதங்களில்
தஞ்சம் அடைந்துவிட்டார்
தமிழோடு இசையோடு என்றும் வாழ்வீர் ஐயா!
உங்களைப் போல் ஒரு வரம்
என்று தமிழ் பெற்றிடுமோ?
ஆழ்ந்த இரங்கல்களும் கண்ணீர் அஞ்சலிகளும்...
பிரிவால் வருந்தும்
உங்கள் சீடன் நீதன்

### 3. வில்லுப்பாட்டு வீரசிங்கம் ஐயா ஒரு சகாப்தம்.

திருச்செல்வம் வாழும்போதே வாழ்த்த வேண்டுமென்று சுகுமார் மாமா ஆசை கொண்ட போதும் அவர் ஆசையப்பாவிற்கு எங்கள் ஐயாவிற்கு செய்ய முடியாமல் போய்விட்டதே என்று நினைக்க மனம் கனக்கிறது. செய்வோம் செய்வோம் என்றிருந்தோம் தை தமிழ்ப் புத்தாண்டு வரட்டும், மகத்தான விழா எடுப்போம் என்றிருந்தோம். அவர் மனம் குளிர மகிழ்ச்சிப்படுத்த எண்ணியிருந்தோம். எண்ணங்கள் எண்ணங்களாக வே இருக்கட்டும் என்றுவிட்டு சென்றுவிட்டார். திருக்கோணமலை மாவட்டத்தின் முதலாவது "கலாபூசண" விருதிற்குச் சொந்தக்காரன். விருது பெற்றதும் கட்டைப்பறிச்சான் கற்பக விநாயகர் முன்றலிலே அவருக்கு பாராட்டு விழாவெடுத்தோம். அவ்வேளை வசந்தன் கூத்தினை மேடையேற்றினார். அதில் என்னையும் ஆட வைத்தார். ஆடு பேரா நீயும் என்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அவரது வழிகாட்டலில் அங்கும் அரங்கேற்றினேன். கண்டி மாநகரிலும் ஹற்றன் மாநாகரிலும் வசந்தன் கூத்து ஐயாவின் பெயரை சொல்லி ஆடியது. இரண்டாண்டு

களுக்கு முன்னர் பேராதனையில் ஆடியவர் அமெரிக்காவிலும் அரங்கேற்றினார்கள். தமிழர் கலை அமெரிக்காவிற்கும் இங்கிருந்தே ஏற்றுமதிசெய்த செம்மல் எங்கள் ஐயா. சந்திக்கும் போதெல்லாம் பாட்டால், கதைகளால் மகிழ வைப்பார். "வெங்காயக் குழம்பு வையடி அதுக்கு வெந்தயத்தப் போட்டு வையடி" என்றெல்லாம் பாடுவார். அவரது பாடல்களை ஆவணப்படுத்த எண்ணினோம். அதுவும் எண்ணமாகியே போனது. காலம் எமை வஞ்சிக்கும். வரலாற்றுத் தவறிழைத்திருக்கிறேன் என என் நெஞ்சம் பதறுகிறது. அதனால் தானோ என்னவோ ஐயாவின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. பொறுத்தருள்க என்று சொல்ல காரணம் எதுவும் இல்லை. கண்கள் குளமாகின்றன. யாருக்குத் தெரியும் இப்படி இப்பவே போவீர்கள் என்று. கைகள் நடங்குகின்றன. போய் வாங்க ஐயா. இதைவிட வேற எதை நான் சொல்ல.

**Gauri Suki** தமிழ்த்தினப்போட்டிகளுக்காய் ஒருதடவை பஸ்ஸிலே கூடவே பயணித்திருந்தோம். கணீரென்ற குரலில் பாடி எங்களுடன் தானும் சேர்ந்து கொண்டார். ஐயா மீண்டும் வாருங்கள் எங்கள் மண்ணுக்

**Manivannan Lakshi** தமிழ் தாயின் மகனுக்கு அஞ்சலி, அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

**Sasitharan Nadesapillai**

எமது ஆழ்ந்த அனுதாபங்கள

**Kandeepan Ratnavadivel**

எல்லோருக்கும் பிடித்த பண்பாளன் மிகச்சசிறந்த சகலகலா வித்தகர் என்பதில் எனக்கும் பெருமை.

**Kandasamy Jeyesangar**

ஆழ்ந்த அனுதாபங்கள்

**Yogarasa Yoga**

ஆழ்ந்த அனுதாபங்கள

**Naresh Kumar**

ஆழ்ந்த அனுதாபங்கள்

**Sukumaran Makalingam**
ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**Tharumarajah Merrushan**
ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றேன்...

**Theebakanthan Mayura**
ஐயாவை போன்ற பல கலைஞர்கள் நம்மால் மறக்கப்பட்வர்களாக இருக்கிறார்கள். அவர்களை நாம் தேடிச்சென்று அவர்கள் சேவையை பதிவிடுவதன் மூலம் பல நன்மைகள் அவர்களுக்கு கிடைக்க வாய்ப்புள்ள தல்லவா.

**ரோக்ஷான் ஏ.ஜிப்ரி**
ரோஷான் ஏ.ஜிப்ரி ஆழ்ந்த இரங்கல்

**Kumarathas Sivapragasam** ஆழ்ந்த அனுதாபங்கள்

**Patrick Antony Emathu alamana anuthapankkal**

**Vasanthy Antony** அவர் ஆளுமையில் எத்தனை அரங்கேற்றங்கள். அந்நாட்களை நினைவு கூர்கின்றேன்.
சேனையூர் கட்டைபறிச்சான் உறவாக. ஆன்மா ஆறுதலடைய வேண்டு கிறேன்.

**Manoharan Punniyamoorthy**
என் இதய அஞ்சலிகள்

**Thusi Ndp**
ஆழ்ந்த அனுதாபங்கள் அய்யா குடும்பத்தாருக்கு

**Yogeswaran Earambu Sivapakkiyam**
ஆழ்ந்த அனுதாபங்கள்

**Chandran Gnana**
ஆழ்ந்த அனுதாபங்கள்

**Nitharshan Nithu**
ஆழ்ந்த அனுதாபங்கள்

**Vasathankumar Vijitha**

ஆழ்ந்த அனுதாபங்கள்

**Michael Collin**

வில்லுப்பாட்டு வீரசிங்கம் அவர்கள் ஒரு சகாப்தம் இவரைப்போன்ற ஆளுமைகள் நூறு வருடங்களுக்கு ஒருமுறைதான் தோன்றமுடியும். "வித்தகர்" என்ற பட்டத்திற்கு மிகப் பொறுத்தமானவர் எனது இதய அஞ்சலிகள்.

---

கல்கொண்டு எறிந்தாடக் கலகலக்கும் வெங்கலக்

கவிசொல்லும் குரலெங்கே குலலைந்து போனதையா?

சில்லென்ற கலைத்தென்றல் சீர்பாடி விளையாடி

சிந்தையிலே நின்றாடி சோர்ந்தெங்கே போனதையா?

சொல்நன்றாய்ச் சகசலத்து சிற்றருவி பாய்வதுபோல்

சுந்தரக் கவியொன்று சொர்க்கலோகம் போனதுவோ?

வில்லொன்று கலகலத்து விண்ணேறிப் போனதுவோ?

விடிகாலைத் தேரேறி விண்ணதிரப் போனதுவோ?

# அஞ்சலிக்கிறேன்

வில்லெடுத்துப் பாட்டிசைத்தாய்
சொல்லெடுத்துக் கவி படித்தாய் - இன்று
வில்லெடுத்த கைகளெங்கே?
சொல்லெடுத்த கவிகளெங்கே?

---

போர் தொடுத்த வீர வாளை
பார் கனக்கப் போட்டுவிட்டாய் - இன்று
யார் எமக்குப் பாட்டிசைப்பார்?
சீர் கொடுக்க யார் வருவார்?

சேனையூர்ப் பள்ளிக் கன்று
கலைச்சேவை புரிந்து வந்தாய் - இன்று
கண்மூடி நீ கிடந்தால்
கலைக்கோவில் அழுதிடாதோ?

பலரும் விரும்பும் நல்ல
பகிடிகள் பகிர்ந்தாய் ஐயா - இன்று
அழுகின்றோம் நாங்கள் வந்து
எழுந்திராய் ஐயா இன்று.

ஊர் எங்கும் விழா என்றால்
உன் நிகழ்வு அங்கிருக்கும் - இன்று
ஊர் விழா வருவதெப்போ?
உன் நிகழ்வு வருவதெப்போ?

திருவெம்பா பூசை நேரம்
திருவெம்பா பாடக்கேட்டோம் - இன்று
அருவமாய்ப் போனதென்ன
திருவாயைத் திறந்திடாயோ.

தொட்டதும் செவ்வாய் நவரசம் கை
பட்டதும் தருவாய் சித்திரம் - இன்று
நெட்ட நெடு மரமாய் நீ
நீட்டியே கிடப்பதென்ன.
திருவிழா என்று வந்தால்
தேர் கட்டி ஓடவிட்டாய் - இன்று
தேரோடும் வீதியெங்கும் உன்புகழ்
கூறி நிற்குதையா.

கும்பத்து மால் வந்தால்
உந்தன் மந்திரச் சொல்அழகு - இன்று
நித்திரை ஆகிவிட்டாய்
இந்த மந்திர மாயமென்ன?
நடிகனாய் மேடையேறி
நாடகத்தை நடத்தி வைத்தாய் - இன்று
துடிக்கின்ற இதயம் அழ
வடிக்கின்ற கண்ணீர் கோடி
கலைஞனாய்ப் பவனி வந்து
கலாபூசணம் பட்டம் பெற்றாய் - இன்று
பட்டம் பெற்ற மாவீரனாய்
பாடையில் போகின்றாயே.

ஆறாத் துயரில் அஞ்சலிக்கின்றேன்.

**– சேனையூர் வி. நவரெத்தினராஜா**

**2018.07.25**

# ஆன்ம சாந்திக்காய் இறைஞ்சுகின்றோம்

சேனையூர் பதியில் பிறந்து கட்டைபறிச்சானில் வாழ்ந்து
கலை வேள்வி சென்து அழியாத வரலாறு படைத்து இன்று
காவியமாகி துயிலுருகின்ற
அமரர் கலாபூசணம் கா. வீரசிங்கம் அவர்கள் எமது பிரதேசத்தின்
புகழ் சேர்த்த கலைமகன் ஆவார்.

வைத்தியம், மாந்திரீகம், இலக்கியம், கலை, பொறியியல்,
வானியல் போன்ற அறிவுகளை பிறவியிலேயே கைவரப்பெற்றவர்.

அன்னாரது இழப்பு எமது பிரதேசத்துக்கு மாத்திரமன்றி வைத்தியம்
மாந்திரீகம் என பயன்பெற்றுவந்த அயல் கிராம உறவுகளுக்கும்
பாரிய இழப்பாகும்.

கலாபூசணம் கா.வீரசிங்கம் அவர்களின் பிரிவால் துயறுரும்
மருமகன் திரு. செ.சிவராஜா அவர்களின் குடும்பத்தார்,
மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருடனும்
நாமும் இணைந்து துயர்பகிர்கின்றோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல கல்லம்பார்
ஸ்ரீ முத்துமாரியம்மனை துதிக்கின்றோம்.

**பரிபாலன சபை**
**கல்லம்பார் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்,**
**கட்டைபறிச்சான்**
**2018.07.25**

# எங்கள் ஆசையப்பு

ஆசையப்பு என்று சொல்லி
அன்பாய் அழைத்திடவே
இனியெமக்கு யார் உலகில் உண்டு ஐயா?
பேச்சழகா பெருமை கொள்ளாக் கலையழகா
மூச்சிருக்கும் வரை முப்பொழுதும்
கலையுணர்வு மாறா எங்கள் குல செயல்வீரா

சந்திரன் என்று அழைக்கும்
உன் அன்பான மொழி கேட்க
ஆவலுடன் வருவேனே
இனி அந்த அன்புக் குரலை
எங்கு கேட்போம் எம் குருநாதா.....

திறமைகெல்லாம் திறமை சேர்க்கும்
உன் திறமை ஒன்றா இரண்டா?
ஒரு நூறு திறமைகள்
ஒருங்கே வாய்க்கப் பெற்ற
ஒப்பற்ற கலைஞனல்லவா நீ
உன் திறமைக்கு
களம் இங்கே அரிதே...
ஆயினும் உன் திறமைகள்
உன் வாரிசுகளின்
வழித்தோன்றல்களில்
மிளிர்ந்து உன் பெயரை நிலை நாட்டும்

**சந்திரன் குடும்பம்**

# அமரர் கலாபூசணம் காளியப்பு வீரசிங்கம் அவர்கள்
# வீரகட்டைபறிச்சான் – 3

சேனையூரைப் பிறப்பிடமாகவும் கட்டைபறிச்சான் 3 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் சேனையூர் கல்விவள நிலைய முன்பள்ளி ஆசிரியையின் தந்தையாருமான கலாபூசணம் கா. வீரசிங்கம் அவர்கள் இன்று இறைபதமெய்தினார்.

அன்னார் இப்பிரதேசத்தின் சிறந்ததொரு இலக்கியவாதியும், பூசகரும், வைத்தியரும் - சமூகசேவையாளரும் ஆவார். முன்பள்ளி நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்த அன்னாருக்கு எமது முன்பள்ளி நிர்வாகம் சார்பாக ஆத்மசாந்தி வேண்டி நிற்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினையும் தெரிவிக்கின்றோம்.

**நிர்வாகம்**
**சேனையூர்கல்வி வளநிலையம்**
**சேனையூர், மூதூர்.**

# சேனையூரைப் பிறப்பிடமாகவும் கட்டைபறிச்சானை வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூசணம் வீரசிங்கம் அவர்கள் 2018.07.25 ஆந் திகதி இறைபதமெய்தினார்.

அன்னார் காளியப்பு தங்கமுத்து தம்பதியினரின்
அன்பு மகனும்,
கமலாதேவியின் அன்புக் கணவரும்,
வீரகத்தி பாக்கியம் தம்பதியினரின் மருமகனும்,
கலைச்செல்வி (ஆசிரியர்), ராஜானந்தி (முன்பள்ளி ஆசிரியர்)
கார்த்திகா, காயஸ்திரி (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,
மனோஜா தட்சணன் ஆகியோரின் பெரிய தந்தையும்.
செல்வராசா, ஜெயகாந்தன், சிவராஜா, ஜெயகாந் ஆகியோரின்
மாமானாரும், சிவலிங்கநாயகி காலஞ்சென்றவர்களான விஜயசிங்கம்,
பாலசிங்கம், யோகாம்பிகை, கமலாம்பிகை
ஆகியோரின் சகோதரரும்.
குழந்தைவடிவேல், நாகராசா, மனோன்மணி, திலகராணி (ஆசிரியர்)
காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, தெய்வநாயகம்,
கனகரெத்தினம், இரத்தினவடிவேல் ஆகியோரின் மைத்துனரும்
விஸ்வா ரூபி, வாஹினி, பகலவன், பவிசன், சர்ஜிகா, பிரித்திகா,
தனுஸ்கா ஆகியோரின் பாசமிகு பாட்டனும் ஆவார்.

**தகவல்**

**குடும்பத்தினர்.**

# குடும்ப விபரம்

**காளியப்பு + தங்கமுத்து** → **வீரசிங்கம்**

**வீரக்குட்டிபிள்ளை + பாக்கியம்** → **கமலாதேவி**

வீரசிங்கம் + கமலாதேவி:

- விஜயசிங்கம்
- யோகாம்பிகை
- பாலசிங்கம்
- கமலாம்பிகை
- சிவலிங்கநாயகி
- கலைச்செல்வி
- ரஜானந்தி
- கார்த்திகா
- கயஸ்திரி
- மனோன்மனி
- நாகராசா
- திலகராணி

**விஜயசிங்கம் + வள்ளிப்பிள்ளை**

தவமணி, இராசலெக்சுமி
தவராசா, தியாகராசா

**யோகாம்பிகை + கனகரெத்தினம்**

தயாநிதிதேவி
தங்கமலர், அஞ்சலிதேவி
அமிர்த கௌரி, சோமசேகரம்

**பாலசிங்கம் + தெய்வநாயகம்**

சுகுமார், சந்திரகுமார்
சக்திகுமார், ஜெயகுமார்
இளங்குமார், கயல்விழி

**கமலாம்பிகை + இரத்தினவடிவேல்**

சாரதாதேவி மஞ்சுளாதேவி உதயகுமார்
சந்திரகுமார், குகன், லக்சுமி, பாபு, ரமா

**சிவலிங்கநாயகி + குழந்தைவடிவேல்**

இரவிச்சந்திரன்
சுதீசன்
விஜயராகவன்
ரமணன், லலிதா, கஸ்தூரி

**கலைச்செல்வி + செல்வராசா**

ரூபி, வாகினி, பகலவன்

**ரஜானந்தி + ஜெயகாந்தன்**

பவிசன்

**கார்த்திகா + சிவராசா**

சர்ஜிகா
பிரித்திகா

**கயஸ்திரி + ஜெயகாந்**

தனுஸ்கா

**மனோன்மனி + குழந்தைவடிவேல்**

பரிமளகாந்தி
நந்தகுமார்
சந்திரகுமார், சித்திராதேவி,
சூரியகுமார்

**நாகராசா + மகேஸ்வரி**

வசந்தி
சந்திரகுமார்
வசந்தகுமார்

**திலகராணி + ரத்தினகுமார்**

மனோசா
தட்சனன்

# நன்றி நவிலல்

துயரச் செய்தி அறிந்து இல்லம் தேடிவந்தோர், தவித்தோர்,
துடித்தோர், உள்ளம் கலங்கியோர், கவிவடிவில்
பிரசுரம் ஆக்கியோர், உரை நிகழ்த்தியோர், அரசியல் பிரமுகர்கள்,
குருமார்கள், மாலை சாத்தியோர்,
மலர்கள் தூவியோர், தொலைபேசியூடாக துயர் பகிர்ந்தோர்,
கண்ணீர் பெருக கதறியோர், மரியாதை செலுத்தியோர்,
உடல் சுமந்தோர், பூமித்தாயிடம் ஒப்படைத்தோர்,
ஆறுதலளித்தோர், அன்னமிட்டோர், உலருணவு பொருட்கள்
வழங்கியோர், ஆலயங்களின் நிருவாகத்தினர், பாடசாலைச்
சமூகத்தினர் மன்றங்கள், சங்கங்கள், கழகங்கள், அமைப்புக்கள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் இந்த நினைவு மலர்
வெளிவருவதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பும், ஆதரவும்
நல்கிய அனைவருக்கும் மற்றும் நன்றி கூறக் கடமைப்பட்டோர்
அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.



**- குடும்பத்தினர் -**

# நூற்றாண்டுத்தவம்

காலப் பெருந்துயரின்
கல்லறையில் நின்றபடி
இந்த பாடல் உனக்காக
இசைக்கப்படுகிறது.

நீ
கொட்டியா புரத்தின் காற்று
உன்
சுவாசம் இல்லாததால்
இங்கு வற்றிப்போனது
கலைகளின் ஊற்று

வில்லுப்பாட்டின்
தேசிய அடையாளம் நீ
உன் கரங்களின் அசைவின்மையால்
இங்கு
நாண்களின் அதிர்வும்
அடங்கிப்போனது

சேனையூர் மண்ணின்
சிகப்புக் கம்பளம் நீ

எல்லோரும் உன்னை
புகழ்கிறார்கள்
நீ
தசவதானியாம்
உனக்குத் தெரியாத கலைகள்
இல்லையாம்

உண்மைதான்
ஆனால் இவர்கள்
எல்லோரும் உன்னை
ஒரு கலைஞனாகப் பார்க்கையில்

நான்
உன்னை ஒரு
நல்ல மனிதனாகவே
பார்க்கிறேன்
மனிதம் நேசித்த
மானுடன் நீ

வில்லுப்பாட்டு
வீரசிங்கா
உன்னைப்போன்றவர்கள்
நூற்றாண்டுக்கு
ஒருமுறைதான்
பிறக்க முடியும்
என்ன செய்வது
காத்துக் கிடக்கிறோம்
இன்னுமொரு
நூற்றாண்டுக்காய்
உன் வருகையை
எதிர் பார்த்து

**மகுடம் வி. மைக்கல் கொலின்**



# உயிர் ஒன்று
# அறுந்துபோனது

சேனையூர் கட்டைபறிச்சான் மண்ணுக்கு
பெருமை சேர்த்த மாண்புறு மனிதர் அவர்.
மறக்க முடியாத பதிவுகளை எம் மண்ணுக்கு
சொந்தமாய் விட்டு சென்ற
கலைத்தாயின் தலை மகன்.

தன் வசீகரித்த குரலால் கேட்போர்
எல்லோரையும் கட்டிப் போட்ட
காந்தமிகு குரல் வளம் கொண்ட
இசை வல்லோன்.சௌந்தரராஜனும்
கோவிந்தராஜனும் கலந்த குரல் அவருக்கு.

கவிதையும் காவியமும் சிற்பமும்
வைத்தியமும் மந்திரமும் நடிப்பும் நாடகமும்
எழுத்தும் இசையும் என எண்ணிட முடியா
கலை வல்லோன்.

எங்கள் ஊரில் நாடகம் என்பதற்கு
அர்த்தம் தந்த அற்புத நடிகன்.
தமிழ் இன உணர்வும் ஈழ விடுதலை பற்றிய
நேசிப்பும் நிறைந்த கலைஞன்
தன் புரட்சிகர எழுச்சி பாடல்களால்
விடுதலை உணர்வை விதைத்த
மா கலைஞன்

இன்று நம்மோடு இல்லை
போய் வாருங்கள்
உங்கள் கனவுகளை சுமந்து கண்ணீரோடு
இறுதி அஞ்சலிகளோடு விடை தருகிறேன்

-பாலசுகுமார்

